REGD 4642 M

...ா விபரம்
—
...ண்டு ரூ 7,
..., 380

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 25–12–49 | இதழ் 26



பேரறிஞர் பராஞ்சிபே

# பகுத்தறிவு—ஒரு பகலவன்

"போடுவோமா, இரண்டு ஆட்டம்!"

"முன்னூத்தி நாலா! மூணு சீட்டா!"

"எதுவேண்டுமானாலும் சரி, ஏதோ இரண்டு ஆட்டம்."

"சரி போடுவோம்!"

"போடுவோம்னு சொல்லிகிட்டே நிக்கிறியே, உட்காரப்பா!"

"நீ எழுந்திருச்சி இடங்கொடுத்தால்ல நான் உட்காரலாம்!"

"ஏன்? இப்படி எதிர்த்தாப்பலே உட்காரேன், இங்கேதான் உட்காரணுமாக்கும்!"

"ஆமாங்க! கோவிச்சுக்காதிங்க—மேற்குப் பார்த்து உட்கார்ந்தா எனக்கு ஆட்டம் வர்ரதில்லேங்க—கிழக்குத்தான் எனக்கு ராசி!'

* * *

"அடாடா! என்ன ஆட்டம், என்ன ஆட்டம்"

"கொன்னுப் பூட்டாங்களே, சிங்கம்னு, சிங்கங்கள் தான்!"

"திக்கு முக்காடிப் போயிட்டானுவ, அப்பா! நம்பஇந்தியனென்றுலே அவுங்களுக்குகெல்லாம் ரொம்ப இளக்காரமாயிருந்தது!"

"அதுதான் வட்டியும் முதலுமா வாங்கிக்கிட்டானுக, என்ன ஆட்டம்! 'பேட்' எடுத்தது தான் தெரியும், மட மடன்னு '50' ரன்கள்!"

"அதுமட்டுமல்லப்பா, அவுங்க வந்து 'பேட்' தூக்கி கொஞ்சநேரம் கூட ஆகல்லே......"

"நம்ம ஆள் 3 பேரை 'அவுட்' பண்ணிட்டானே!"

"நம்ம இந்திய ஆட்டக்காரர்கள் ஜெயிச்சதுக்கு எது காரணம் தெரியுமோல்லியோ?"

"அவுங்களோடே ஆட்டம், திறமை!"

"ரொம்பத் தெரிஞ்சவன் தான் நீ......அது இல்லேப்பா, காரணம்!"

"அப்புறம் என்னு, வெளிநாட்டு ஆட்டக்காரர்களுடைய இளிச்ச வாய்த்தனம்னு சொல்றயா?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே, இன்னைக்கு காலையிலே ஆட்டம் ஆரம்பமாகும் முன் நம்ம ஊர் குருக்கள், சாமியார்கள்......"

"ஆசிர்வாதம் செய்தார்களாக்கும் போபபா!"

"நான் சொன்னு, உனக்கு அப்படித்தானிருக்கும்"

"ஆட்டம் ஆரம்பிக்குமுன் இன்னைக்கி காலையிலே தேங்காயுடைத்து ஜபம் செய்தார்களாம்பா!"

* * *

'சுயராஜ்யம் வரப்போவுது தெரியுமா!"

"யாருக்கு? நம்ப நாட்டுக்குத்தானே!"

"ஆமாம்!"

"இது தெரியாதவங்க கூடவா இருப்பாங்க?"

"இல்லே, எப்ப தெரியுமா நம்ம சுயராஜ்யம் ஆரம்பமாவுதுன்னு!"

"நாளைக்கு......"

"அதுதான் இல்லே! இன்னைக்கு அர்த்த ராத்திரிலேயிருந்து..."

"நடு ராத்திரியிலேயா? அதென்னப்பா—அப்படி!"

"அப்பத்தான் நல்ல வேளையாம்! நட்சத்திரம், நாழியெல்லாம் ஒத்து வருதாம், ஆகவே......"

"சர்க்காரே ஏற்பாடு செஞ்சிருக்காங்களா!"

"பின்னே, யாரு செய்வாங்களாம், சர்க்காருதான்!"

* * *

சீட்டாடும்போது, அநேகமா
எங்கும் ஆரம்பத்தில் குறிப்பிட்ட
போன்ற உரையாடல் நடைபெறு
விருப்பது அபூர்வம். எனக்கு
தெரிந்த நண்பர், சீட்டாட்ட
திலேயே தன் வாழ்க்கையைப் ப
யம் வைத்திருப்பவர், எப்போது
எங்கே ஆட உட்கார்ந்தாலும் இ
போலத்தான் வம்பும், வழக்கு
செய்வார்! ஆனால், ஆடிவிட்டு
திரும்பும்போது அவரைப் பார்
தால்பரிதாபமாகயிருக்கும்! சோர்
நடை, வருத்தமான பேச்சு — இ
துடன் இரண்டு நாட்களுக்
வெளியே தலைகாட்டமாட்டா
இடம்பார்த்து உட்கார்ந்தாரல்லவ
அவர், அவருக்கு ரூபாய்க் கணக்கி
கஷ்டமாயிருக்கும்; பணம் வந்திரு
காது!

அதே போலத்தான்—சிலஆண்
களுக்கு முன்னர் காசியில் வெ
நாட்டாருக்கும்—இந்தியருக்கு
கிரிக்கெட் ஆட்டப் பந்தயம் நட
பெற்றது. அதில், இந்தியக் கு
வினர், வெற்றி பெற்றனர் அமோ
கமாக. அதற்கு, அவர்கள் ஆட்ட
திறமைதான் காரணம் என்
சொல்லப்படவில்லை. காலையில் அவ
கள் ஆட்டம் ஆடுமுன், காசி குரு
க்கள்மார், அர்ச்சனையும் மந்திரா
சாடனமும் செய்தனராம்; ஆகவே
அவர்கள் வெற்றி பெற்றனராம்
அப்படிக் கூறப்பட்டது — அந்
வெற்றி ஆடியவர்கள் திறமையா
லல்ல, அர்ச்சனையின் மகிமையா
என்பதாக. ஆனால், கடந்த ஆண்டி
பார்த்தோம், அடிக்கடி கவனித்
வருகிறோம், வெளிநாட்டுக் கு
வும் — இந்தியக் குழுவு
இங்கு விளையாடுவதை. அ
களில் வெளி நாட்டுக் குழுவின
தான் அநேகமாக வெற்றிபெ
கின்றனர்—விருது பெறுகின்றனர்
எங்கு போய் ஒளிந்துகொண்
டதோ, இங்குள்ள வேத வேதா
திகள், மந்திரத்தால், மாங்கா
விழச் செய்பவர்கள், அர்
சனையால் அண்ட சராசரங்களையு

ட்டிப்படைப்பவர்களான இவர் ளுடைய திறமையெல்லாம்! தெரிய ல்லை!!

த்தியாவைப்போல நீண்ட நாள் ங்கிலேய ஆதிபத்தியத்தின் பிடி ல், அடிமைப்பட்டுக் கிடந்த நாடு ர்மா. அதற்கும், 1947ம் ஆண்டில், ரிட்டிஷாரால் சுதந்திரம் அளிக்கப் ட்டது. எந்தவேளையில் சுயராஜ்யம் னப் பிரகடனப்படுத்துவது, சுய ாஜ்ய சர்க்காராகப் பதவியேறுவது, ன்பதற்கு நள்ளிரவைக் குறித்தார் ள்—ஊர் உறங்கும் நேரத்தை, ள்ளன் கன்னமிடச் செல்லும் வேளையை! அந்த நேரத்தை அவர் ள் குறித்ததற்குக் காரணம், பக ல் நேரமும் வேளையும் சரியாக ல்லையென்று கூறப்பட்டது! னுல், சோதிடர்களைத் துணைக் காண்டு, கோள்களின் நிலைபறிந்து காண்டாடப்பட்ட சுதந்திர விழா லர்ந்து ஓரிரு ஆண்டுகள்கூட ஆக ல்லை! பர்மா வாழும் வகையென்ன, ங்கு நிலவும் நிலையென்ன? 'பர்மா ின் பரிதாபம்' என்றுதானே, காட்டை யெழுத்துக்களில் செய்தி யைக் காண்கிறோம்—நல்ல நாள் ார்த்து நாழி நட்சத்திரம் குறித் த்தான் ஆரம்பித்தனர் சுயராஜ்ய ர்க்காரை. ஆனால், அதன் தலைவராக ருந்தவர் — அவுங்சான் — ாழ்வு ஓராண்டுக்குள் குண்டு ளால் கொள்ளையிடப்பட்டது! ின்றோ, நாளையோ என்று ஒரு க்கம் கரீன்கள் தாக்க, இன் னொரு புறம் கம்யூனிஸ்டுகள் கல ரம் செய்ய, எப்போது வீழ்ச்சியோ ன்று வேதனைக்கும் சோதனைக்கும் ள்ளாகி நிற்கிறது! இங்கு இந்தியா ில் மட்டுந்தானென்ன! அர்த்தராத் திரியில்—வேதபாராயணங்களுடன், ஸ்லோகங்கள் சொல்லப்பட்ட பிறகு ான் சுயராஜ்யம் கொண்டு வரப்பட் -து—என்ன? சுகம் மலர்ந்தா விட் -து—தொல்லையும் அவலமும், யரக் கீதமுந்தானே நிலவுகிறது!

* * *

சித்தரித்த இவை, மக்கள் மன்றத் திலே, அறிஞரிடையிலே, அரசாங் கத்தையாள்பவரிடையே, பகுத்தறிவு பயன் படாக்காரணத்தால் நிலவும், மூடநம்பிக்கையைக் காட்டுவதறகா கும். மூடநம்பிக்கை, இங்கு மட்டும் என்றல்ல, உலகின் பலபாகங்களிலும் பல உருவங்களில், பல மாதிரிகளில் காட்சியளிக்கிறது — அதன் கோர வாய் எத்தனை யெத்தனையோ மகு டாதி மன்னர்களையும், புகழ்பெற்ற நாடுகளையும், விருது பெற்ற வீரர் களையும் தன் காலடியில் தாசனாக ஆக்கிக்கொண்டிருக்கிறது!

கேட்டதை அப்படியே நம்பு, சிந் திக்காதே, பெரியவர்கள் கூறியதில் பிழைகாணாதே என்ற கட்டளைகள் 'விதி' என்ற மோகன மெருகுடன், நரகம் மோட்சம் என்ற பயமுறுத் தலுடன், மதப் போர்வையின்மீது சுமத்தப்பட்ட காரணத்தால், இன் றும் மனிதசமுதாயம் அறியாமை— சிந்தித்துப் பார்ப்பது கூடாது— 'பாவம்' என்ற பயம் ஆகியவைகளில அகப்பட்டு விழிக்கிறது! விஞ்ஞா னத்தை வேரறுக்கவும், பழை மைக்கு வரவேற்பு நல்கவும் மதம் என்ற கல்லுக்கு விருத்த வெண்பா பாடவும், தூண்டுவதும், சுயப்புத்தி யைச் சூறையாடுவதும்—இந்த மூட நம்பிக்கைதான். மூடநம்பிக்கை ஒரு நச்சுமரம்— அதைத்தகர்க்கும் கோடரி, பகுத்தறிவு!

பகுத்தறிவ மக்கள் மன்றத்திலே ஏற்பட்டு விட்டால், வாழ்விலே மணம் எழும்பும்— இருட்டை வீழ்த்தி எழும்பிடும் நிலவைப் போல! ஆனால், இன்று, விஞ்ஞானம் உலகை ஆக்கும் 'கடவுள்' என்று கருதப்படுகிற இந்நாட்களிலே என்ன நடைபெறுகிறது, விஞ்ஞா னம் ஒருகையில், வேதப்புத்தகம் இன்னொருகையில்! இந்த வேதனை நிலை இந்த—துரதிர்ஷ்ட இந்தியா வில்தான் என்றில்லை! எல்லா நாடுகளிலும் இதேகாட்சிதான்—

மூடநம்பிக்கை முறியடிக்கப்பட வேண்டும் என்று நடைபெற்று வரும் போராட்டம், அறிவுத யப்பணி—ஒரு சோகத் தொடர் கதை! இந்தப் பணியில் இறங்கிய எண்ணற்றோர் வாழ்வை நாசமாக் கிக்கொண்டிருக்கின்றனர், கல்லடிக் கும், சொல்லடிக்கும் ஆளாகி இருக் கின்றனர்!

எவ்வளவோ வீரர்களின் இரத் தத்தால் கழுவப்பட்டு ஒளிவீசச் செய்யப்படுவதுதான் பகுத்தறிவு.

* * *

மனிதன் பிறக்கிறான்—வாழ்வ தற்கு! ஆனால், வாழ்கிறானா? பதில் பரிதாபமானது.

வாழ்க்கை வாழ்வதற்கே! என்று கூறுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால் வாழ்கிறார்களா — இல்லை! சுதந்தரம் நமது பிறப்புரிமை, அடை வோம் சுதந்தரம் என்று ஆர்ப்ப ரிக்கின்றனர்—அடைகின்றனர். ஆனால், வாழ்வில் சுதந்தரம் உண்டா? இருக்கிறதா? கிடை யாது!

பரிதாபம், இல்லை, கிடையாது! ஆகியவைகள்தான், கேட்கப்படும் கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில் களாகயிருக்கும். வாழ்க்கையின் ஒவ் வொரு துளி நேரத்திலும் மனிதன் போராடுகிறான்—அவன் வாழ்வு போராட்டத்திலேயே பிறக்கிறது, —வளர்கிறது; போராடிப்போராடியே இறக்கிறான்! ஆரம்பமும் முடிவும் சோகத்துடனேயே ஆரம்பித்து துயரத்திலேயே முடிகிறது! வாழப் பிறந்தான் பிறக்கிறான் — ஆனால் வாழ்வதில்லை, வாழமுடிவதில்லை!

அவனைப் பிடித்துப் பீடிக்கும் மதம், மூடநம்பிக்கை, பழைமை என்கிற கயிறுகள் அவன் வாழ்வைக் கொள்ளைகொண்டு விடுகின்றன. அவைகளுடன் ஒன்றி, ஆட்பட்டு, தணிந்து, பணிந்து, வாழ்வதே வாழ்வு என்று தன் வாழ்க்கையின் இலட்சியத்தை வரையறுத்து முடித் துக் கொள்கிறான்!

ஓடும்நதியை, மனிதனின் கண்களில் மதமும் மூடநம்பிக்கையும் காட்டு வதில்லை. பயனும் பலனுமில்லாத பாசிபடிந்த குட்டையைத்தான் காட்டுகின்றன — குளி, இதுதான் உன்னுடைய இடம் என்று சுட்டிக் காட்டி!

மனிதனும் தன்னுடையது இது தான் என்றெண்ணிக்கொண்டு அதற் குள் கிடந்து, அங்கு ஒருபுறம் பாசி பிடித்திழுக்க, இன்னொருபக்கம் நீர்ப் பாம்பு கடிக்க, சேறு காலை நகர்த்த வும் விடாமல் தடுக்க, இவைகளைப் பொறுத்துக் கொள்வதுதான் வாழ்க்கை, என்று எண்ணி, அவை களுடன் போராடி—அல்லது தாண்டி —கரையேறுவதற்குப் பதில், அதி லேயே மூழ்கி, மனிதப் பிறவியை மாய்த்துக்கொள்கிறான்—வாழாமல், வாழ்க்கையை அனுபவிக்காமல்! வேத னையான நிலை இது. இப்போதும்

Filmed as bound.

நீடிக்கிறது—நிலைக்கவைக்க முயற்சி செய்யப்படுகிறது!

* * *

இந்த வேதனை நிலையையும், விஞ்ஞானமும்உரிமைவேட்கையும்மனித இதயங்களில் விளையாடும் இந்நேரத்தில்கூட இது நீடிப்பதுபற்றியும் சென்னையில் 18—12—49 அன்று நடைபெற்ற இந்திய பகுத்தறிவாளர்கள் மாநாட்டில் தலைமை தாங்கிய டாக்டர் பராஞ்சிபே அவர்களால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. டாக்டர் பராஞ்சிபே — பல்துறை கண்ட அறிஞர். ஐம்பது ஆண்டுகளுக்குமேலாக, தன்னுடைய காலத்தை, பகுத்தறிவு வளர்ச்சிக்கெனச் செலவழித்து வருபவர். அவருடைய சொற்பொழிவில் அருமையான எண்ணங்கள், இந்நாட்டுக்குத் தேவையான இலட்சிய கீதங்கள் முழக்கமிடுகின்றன. அவருடைய பேச்சு, சுயமரியாதைக்காரர்களுக்கு பழம்சோறு — பல ஆண்டுகளாக இதேபணியில் அவர்கள் ஈடுபட்டிருப்பதால், இதே கருத்துக்களைப் பரப்புவதில் பாடுபட்டு வருவதால்!

டாக்டர் பராஞ்சிபே நல்ல அறிஞர் என்பதுமட்டுமல்ல, பொறுப்புள்ள பதவிகளையும் வகித்தவர். 1876ம் ஆண்டிலே பிறந்த, அவர் பூனா கல்லூரியிலே படித்தபின் கேம்பிரிட்ஜ், பாரிஸ், ஜெர்மனி முதலிய வெளிநாடுகளுக்குச் சென்றுபடித்து பட்டங்கள் பெற்றவர். தான் ஆரம்பத்தில் படித்த கல்லூரியிலேயே கணிதப் பேராசிரியராகவும் பிரின்சிபாலாகவும், பணியாற்றியவர். இந்தியப்பெண்மணிகள் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும், பம்பாய் சர்க்காரில் மந்திரியாகவும், இந்திய கவுன்சில் உறுப்பினராகவும்,இருந்து பணியாற்றிய இவருடைய முழுப் பெயர் சர். ரகுநாத், புருஷோத்தம பராஞ்சிபே ஆகும். இவர், ஆட்சி விவகாரங்களில் தேறியவர். லக்னோ பல்கலைக் கழகத்திலே துணைவேந்தராகவும், இந்திய வரி விசாரணைக் கமிட்டியில் உறுப்பினராகவும், இன்னும் இதுபோன்ற பலதுறைகளில் மக்கள் மன்றத்துக்கானநன்மைக்காரியங்களில்ஈடுபட்டுப் பாடுபட்டவர். ஆஸ்திரேலியாவில் இந்திய சர்க்காரின் அரசியல்தூதராக இருந்து அண்மையில் சிறிது மாதங்கள் முன்புவரை பணியாற்றியவர்.

இத்தகைய சிறந்த நல்லறிஞர், இன்றைய ஆளவந்தார்களுடன் தொடர்பும் நேசமும்கொண்டுவிளங்குபவர், அளித்துள்ள கருத்துரைகள் இங்குள்ள 'பெரியமனிதர்களில்' சிலருடைய கவனத்தைக் கவரத்தான் செய்யும். எனவே, அவருடைய சொற்பொழிவில் சிதறியுள்ள சிந்தனை முத்துக்கள் —குறிப்பிடப்படவேண்டியன. வளரும் உலகுக்கு வசந்தவிழாவில் ஏற்படும் குதூகலத்தையும் இன்பத்தையும் வழங்கக் கூடியன.

* * *

உலகின் எல்லாப் பாகங்களிலும் நிலவும் எதேச்சாதிகாரப் போக்கு, பகுத்தறிவுக்கு எதிர் முரணானது. பகுத்தறிவு படுத்தால் எதேச்சாதிகாரமே உருவாகும்.

* * *

எதேச்சாதிகாரம், சர்வாதிகாரம் ஆகிய இந்த ஆபத்துக்கள் வேறு எந்த நாட்டையும்விட இங்கு அதிகமான அளவில் வளர்ந்து கொண்டு வருகின்றன — நம்மை நடுங்கவைக்கும் வகையில்! காரணம், கருத்துக்கள், எண்ணங்கள் ஆகியவைகளுக்குப் பதில் நாம் அவைகளைக் கூறிய "நபர்களுக்கே" அதிக முக்யத்துவம் கொடுத்து வருகிறோம்.

* * *

டாக்டர் பராஞ்சிபே கூறுகிறார், எதேச்சாதிகாரம் எங்கு உருவாகிறது, சர்வாதிகாரத்தின் வித்து எப்படி வளர்கிறது, விஷ மரமாகிறது என்பதை!

உள்ளத்தில் உதிப்பது சரியெனப்பட்டால் உரைக்க வேண்டும்— அது மனிதனின் சுதந்திரம். அப்படி உரைக்க யார் நீ, நான் சொல்வதுதான் திட்டம், இட்டதுதான் சட்டம்—இது சர்வாதிகாரம்,எதேச்சாதிகாரம்.

மதம், எதேச்சாதிகாரத்தால் வளர்ந்தது. அங்கு சர்வாதிகாரம் தழைக்கக் காரணமாகயிருந்தது, "நான் சொன்னதை நம்பு! இல்லையென்றால் நரகம்தான்!!" என்று மக்களை நம்பச் செய்து, நம்பாதவர்களைப் பயம் பலாத்காரம் ஆகியவை
களால்கொடுமைப் படுத்திச் செய்ய
பட்ட அட்டூழியங்கள்.

மகான்களுக்கும், மத சிரேஷ்ட
களுக்கும், முனிபுங்கவர்களுக்கு
மக்கள் தலை வணங்கினர்; பக்
செலுத்தினர், அதுவே முக்தி மார்
கம் என்று கூறப்பட்டதால்! விளை
—அவர்கள் 'இட்டதே கட்டளை
சொன்னதே வேதவாக்கியம்' என்
ஆயிற்று. குருஜி சொன்னால், ப
தன் எதிர்த்துப் பேசக்கூடாது
கைகட்டி வாய் பொத்தி நின்
அவர் கூறுவதைக் கேட்கவேண்டு
என்பது சம்பிரதாயமாயிற்று
அதுவே மத மார்க்கம், மனிதனை
புனிதராக்கும் புண்ய வழி என்
போதிக்கப்பட்டது. அதன் விளை
வாக "மதம் என்றாலே—மறுத்து
பேசக்கூடாது! குறையிருந்தாலு
கூறக்கூடாது—அப்படி எதிர்த்
உரைப்பவன், நாஸ்திகன், நம்பி
கையில்லாதவன்!" என்ற எதே
சாதிகார நிலையும், சர்வாதிகாரமு
சிருஷ்டிக்கப்பட்டது! தாங்கள்
சொல்வதே சரி, இட்டதே சட்ட
எதிர்த்துப் பேசுவதோ, குறை
கண்டு கூறுவதோ தேசத்துரோகம்
தேசபக்தியற்றவர்கள் என்று தூற்
கிறார்களல்லவா, அரசியலில் அவ
கள் நடந்துகொள்ளும் போக்கை
கண்டித்தோ, இடித்துரைத்தோ
எதிர்க் கட்சிக்காரர்கள் கூறினால்
இதுவும், மதத்துறையில் எப்ப
அறிவுக் கண் அடைக்கப்படவேண்
டும் என்று மதவாதிகளால் கூற
படுகிறதோ, அதுபோல அரசிய
துறையில் கூறப்படுவதாகும்! மத
துறையில், சந்தேகங் கேட்டா
ரெளரவாதி நரகம்கிடைக்கும்,இவ
நாஸ்திகன் என்று இலகுவாக
பட்டம் சூட்டப்படுவான், அதே
போல அரசியலிலும், ஆளவந்த
ரைக் குறை கூறுவது தேச
துரோகம், என்று பட்டம் தரப்படு
கிறது! இரண்டு இடத்திலும் அறி
வுக்குத் திரையிடப்படுகிறது—
இதன் விளைவாக எதேச்சாதிகாரம்
உருவாகிறது!

இந்த உண்மையைத்தான் தோழ
பராஞ்சிபே கூறியுள்ளார், இன்
இந்தியாவில் நிலவும் அரசியல் நி
மைகளை யொட்டி. உண்மையுங்கூட
எப்படி மதத்துறையில் சங்கராச்
சாரி, ராமானுஜாச்சாரியார், சிரு
கேரி மடத்தார், ஜீயர் ஆகியோ

(13-ம் பக்கம் பார்க்க)

## திகைத்தார்! திணறினூர்!

14-ம் பக்கத்தொடர்ச்சி

டித் திகைத்தனர்! ஆங்கிலத்தி லேயே கேள்விகளைக் கேட்குமாறு தவிச் சபாநாயகர் பணித்தார்!

கவர்னர் ஜெனரல் சி. ஆருக்கும் கிழ்ச்சி மலர்ந்தது – வரவேற்பு தலுங்கில் இல்லாமல்–புரியும்படி ன ஆங்கிலத்தில் இருந்ததால்!

ஹிந்தி கற்றுக் கொள்ளுதல் என் துபற்றி, மந்திரியார் இந்தியில் பசவில்லை—தமிழில் கூட பேச ல்லை, பேசுவதற்கு இயலாது ன்ற காரணத்தால்! ஆங்கிலத்தில் ான் பேசுகிறூர்!!

ஆங்கிலம்–இவர்களுடைய எண் ணங்களைப் பிரதிபலிக்கும் மொழி க இருக்கிறது. ஆனுல், ஆங்கி த்தை விரும்பிப் பேசும் இவர் ளோ–இந்திப் பிரியர்கள், இந்தி ான் இந்நாட்டின் பொதுமொழி க இருக்கவேண்டும் என்று கூறு வர்கள், முனைந்து, முயற்சி செய் வர்கள்!

உதவி சபாநாயகரும், உணவு மந் ரியாரும் ஏதோ, எப்போதோ ன்று டில்லி சென்றவர்களோ, சுற் ப் பார்த்துவிட்டு வருவோம் ன்று போனவர்களோ அல்ல! த்தனையோ ஆண்டுகளாகத் தாடர்பும், கடந்த சில ஆண்டுக க அங்கேயே அநேகமாகத் தங்கி ருக்க வேண்டிய அவசியத்திலும் ருப்பவர்கள்—இன்னும் இருந்து காண்டிருப்பவர்கள். தினசரி, லையாள் முதல் விருந்தினர்வரை லவித வடநாட்டார்களைச் சந்திப்ப கள், உரையாடுபவர்கள், இந்தி பசுபவர்களைத் தங்கள் தலைவர் ாகப் பெற்றவர்கள், இருந்தும் ந்தி புரியவில்லை—ஆங்கிலத்தின் லம்தான் அவர்கள் தங்கள் கருத் க்களைத் தெரிவிக்க வேண்டியநிலை ருக்கிறது!

கவர்னர் ஜெனரல் சி. ஆர். றந்த இடமோ, வளர்ந்த பூமியோ, வளி நாடல்ல; ஆந்திரத்துக்கு ருகிலிருக்கும் தமிழ் நாடுதான்.

ஒரு காலத்தில் சென்னைப் பிரதம க இருந்தபொழுது, ஆந்திராவு ன் பழகவேண்டிய நிலையும், அவர் டன் அடிக்கடி—ஏன், தினசரி— திக்கவேண்டிய கட்டமும் ஏற் பட்டிருந்தது. அது மட்டு மல்ல, ஆந்திராவுக்கும் தமிழகத்துக் கும் இருக்கும் தொடர்பு, வட நாட் டுக்கும் தென்னுட்டுக்கும் இருப்பது போன்றதல்ல—நெருங்கியது—நெடு நாட்களாக இருப்பது, நீடித்துக் கொண்டே இருப்பது! இருந்தும், முன்பு தெரிந்த தெலுங்கு மொழி யைச் சில ஆண்டுகள் வடநாடுபோய் இருக்க நேரிட்ட காரணத்தால் மறந்துவிட்டேன் என்கிறூர்—மதிப் புக் குரிய இந்திய கவர்னர் ஜெனரல்.

இதே போலத்தான், ஆட்சிப் பீடம் ஏறிப் பல ஆண்டுகள் ஆகிய பின்னரும், தமிழில் பேசமுடியாது, ஆங்கிலத்தில், எப்படி இந்திக் கற்றுக் கொள்ளுவது என்பது பற்றிப் பேசு கிறூர் — நமது மாகாணக் கல்வி மந்திரி!

இவர்கள் யாவரும் இந்தியைத் தேசிய மொழியாக்கப்படுபடும் திரு வாளர்கள் — அவசியம் எனக் கூறுப வர்கள்—அதற்காக, நம்மீது தடியடி நடத்தவும் சிறையில் தள்ளவும் தயங்காதவர்கள்! இருந்தும்—இந்தி பக்தர்களாகிய இவர்களுக்கு ஆங் கிலம் தேவைப்படுகிறது — டில்லி யில்! விசாகையில்! சென்னையில்!

ஆங்கிலம் அந்த அளவுக்கு இந்தி யாவில் வளர்ந்திருக்கிறது — மற்ற நாடுகளைப்போல! பெரும்பாலான படித்தவர்கள் அதையறியும் வாய்ப் பும்—வசதியும்—கிடைத்தவர்க ளாக இருக்கிறூர்கள் ஆங்கிலத்தில், எழுதவும், பேசவும், உலகிலேயே சிறந்த பாண்டித்ய முடையவர்கள் என்று கருதப்படும் அளவில பேரும் புகழும் பெற்றவர்கள் இங்கு பல ருண்டு! ஆங்கிலம் உலகமொழி—இது வெல்லாம் நாம் இதுவரை இந்தி மொழி ஏகாதிபத்திய வாதிகளுக்குக் கூறிவந்ததும், கூறி வருவதும் ஆகும்.

ஆனுல் வடநாட்டினருக்கு, உண்மை கண்களில் புலப்படவில்லை, தங்கள் மொழி பிரதான நிலைபெற வேண்டும், ஆட்சி மொழியாகவேண் டும் என்ற ஆவேசமும், வெறியும் பிடிக்கும் காரணத்தால்!

இந்தியா ஒரு பரந்த உபகண்டம், பல இனங்களை, பலமொழி பேசும் மக்களைக் கொண்ட நாடு: எனவே, அங்கெல்லாம், ஒருபுது மொழியைப் புகுத்தி, அதை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதில் அல்லலும் தொல்லையும் ஏராளம்— இடைஞ்சல் கள் மலை மலையாக இருக்கின்றன என்ற உண்மையை உரைத்தால், நமக்குக் கிடைப்பது, தேசத் துரோகிகள் என்ற பட்டம்!

தாய்மொழி தவிர, பிறமொழி களைக் கற்றுக் கொள்ள வேண்டுமா ஞல், அதற்கென எடுத்துக்கொள்ள வேண்டிய சிரத்தையும், அனுபவிக்க வேண்டிய கஷ்டமும் ஏராளம், அதி கம். அதுவும், ஒரு புது மொழியைப் புகுந்து, அவைகளில் பழகவேண்டு மென்று முயற்சித்தால் அது சாமான்யமானதோ, சங்கடமின்றிக் கற்றுக்கொள்ளக் கூடியதோ அல்ல!

இந்த உண்மை—நாம் இதுவரை கூறுவது —எனினும், இது, இப் போது, சட்ட சபையில், கவர்னர் ஜெனரல் வெளியிட்ட தகவலில்— மலையாள மாதவ மேனன் பேச்சில் விளங்குகிறது, தெளிவாகத் தெரி கிறது.

X X X

நாட்டை ஆளும் பொறுப்பும், சிறப்பும் பெற்றிருக்கும் நாயகர்கள், —இந்தி இந்நாட்டின் பொதுமொழி யாக்கப்படவேண்டும் என்று கருது பவர்களுடைய நிலை இது! அதிலும், இவர்கள் யாவரும் இன்று நேற்றல்ல; எத்தனையோ ஆண்டுகளாக இந்தி தான் தேசிய மொழியாக வேண்டும் என்று கூறி வருபவர்கள், அப்படிக் கூறுவதுதான் தேசபக்தியின்சிறந்த பண்பு என்று எண்ணுபவர்கள், இவர்கள் திகைத்திருக்கிறூர்கள் ஓரி டத்தில்! இன்னேரிடத்தில் 'இதற்குப் பதில் 'அது' இருந்தது எவ்வளவு நல் லதாயிற்று தெரியுமா என்று கேட்டி ருக்கிறூர் ஒருவர், இன்னெருவர் இந்தி மொழி கற்றுக்கொள்வதுபற்றி ஆங்கிலத்தில் பேசுவதாக அறிவிக் கிறூர்! அதிலும், முன்பு தெரிந் திருந்த கொஞ்சநஞ்சம் தெலுங்கும் தான் வடநாடு சென்று சிலகாலம் தங்கியிருந்த காரணத்தால் மறந்து போய்விட்டதாம்; கூறுகிறூர், கூச் சமோ, மறைவோ, வெட்கமோ இல் லாமல் — இந்நாட்டுக் கவர் னர் ஜெனரலாகயிருப்பவர்! அருகிலி ருந்து அன்யோன்யமாகப் பழகிக் கற்றுக்கொண்ட கொஞ்ச நஞ்சம் தெலுங்கும் மறந்து போய் விட் டதாம், சொல்லுகிறூர் அவர். ஆனுல், அதே நேரத்தில எங்கேயோ இருக்

கும் வடநாட்டு மொழியை இங்குள்ளோர் கற்றுக்கொள்ள வேண்டுமாம், சர்க்கார் மொழியென ஏற்றுக்கொள்வது அவசியமாம்!

நாட்டின் ஆட்சியைத் தலைமை தாங்கி நடத்தும்பொறுப்பிலிருக்கும் பூமான்கள், ஆங்கிலம் இல்லையென்றால், நல்லாடவேண்டிய, நிலையிருக்கிறது! திகைத்திருக்கிறார்கள் சபாநாயகரும் மத்தியசர்க்கார் மந்திரியாரும், இந்தியில் கேள்விகேட்கப்பட்டதால் புரியாமல், தெரியாமல்!

விசாகையில் பேசிய கவர்னர்ஜெனரலும் தெலுங்குக்குப் பதில் ஆங்கிலத்தில் வரவேற்பு இருந்ததைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். அங்கு வரவேற்பு அளிக்கப்பட்டது போலல்லாது, தெலுங்கில் அளிக்கப்பட்டிருந்தால் திணறித்தான் போயிருப்பார்! அந்த 'கதி'தான் 'கனம்' மாதவமேனனுக்கும் ஏற்பட்டிருக்கும், அவர் இந்தியிலேயே பேசவேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருந்தால்!

இருந்தும், ஆங்கிலம், எந்த அளவுக்கு இந்நாட்டில் பொதுமொழியாக நிலைத்திருக்கிறது என்பதை அறிந்திருந்தும், உரத்த குரலில் ஊருக்குபதேசிகளாக—இந்திதான் அவசியம், அதுதான் பொதுமொழியாக வேண்டும்—என்று தினசரி முழக்கமிடுபவர்களாக உலவி வருகின்றனர்!

X X X

பல மொழிகள் ஒரு நாட்டில் உலவுகிறதென்றால், அங்கு வாழும் எல்லா மக்களுடைய தாய்மொழியையும் ஒருவர் அறிந்துகொள்வதென்பது இயலாது—ஆகாது, ஆகிற காரியமுமல்ல. ஆனால், அப்படி எல்லா மொழிகளையும் கற்றுத்தானாகவேண்டும் என்று கூறப்பட்டால் அனந்தசயனமும் தௌலத்ராவும் இந்தி அறிந்தவர்களாக ஆகியிருக்கவேண்டும், சி. ஆர். தெலுங்கு கற்றவராக இருந்திருக்க வேண்டும், கல்வி மந்திரியார் மாதவமேனன் தமிழ் கற்றவராக ஆகியிருக்கவேண்டும்!

இது சாத்யமா என்றால், இல்லைதான்! ஆனால், அதே வேளையில், நடைமுறையில் இருக்கும் ஒரு பொது மொழியை, எல்லார்க்கும் புரிந்ததாக, எல்லாத் துறைகளிலும் சிறந்ததாக இருக்கிற உலக மொழியை, ஆங்கிலத்தை, நீக்கிவிடவேண்டுமாம்! அதற்குப் பதில் இந்தி கொண்டுவரப்பட வேண்டுமாம்—அதுதான் தேசசேவையாம், தேசபக்தியாம்! கூறுகிறார்கள். அதே நேரத்தில் மக்களுக்குப் புரிய, எந்த மொழி கூடாது என்று கூறுகிறார்களோ, அதே ஆங்கிலத்தையே தனது கருத்தைத் தெரியவைக்கும் மொழியாக கைக்கொள்ளுகிறார்கள்! இவர்களை என்னவென்று சொல்வது, எத்தர்கள் என்றா, எதையும் தெரியாதவர்கள் என்றா!

## அறிவிப்பு.

1—1—50-லும், 8-1-50-லும், வெளிவரவேண்டிய, "திராவிட நாடு" தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய ஊர்களில் நடைபெறவிருக்கும் நாடகங்களையும், திருச்சியில் நடைபெறவிருக்கும் மாவட்டத் தி. மு. கழக மாநாட்டையும் முன்னிட்டு நிறுத்திவைக்கப்படுகிறது.

அடுத்த இதழ்

பொங்கல் மலராக, வாசகர்களுக்கு 14—1—50-ல் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படும்.

அடுத்த இதழ்

"திராவிட நாடு" அலுவலகத் தோழர்களுக்குப் பொங்கல் விடுமுறை விடவேண்டியிருப்பதால், 22—1—50-ல் வெளிவர வேண்டிய இதழ் நிறுத்தப்பட்டு, 29-1-50-ல் வழக்கம்போல்வெளியிடப்படும் என்பதை வாசகர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்.

7-ம் பக்கத் தொடர்ச்சி

ஆள்பவரை — ஆளும் கட்சியின் தலைவர்களே தூற்றுகின்றனர் வாய்ப்பந்தல் போட்டோரே யொழிய எதையும் காரியமாக்கிக் காட்டவில்லை யென்று கூறுகின்றனர். அதோடு "ஓரிடத்தில் ஒன்று கூறுகிறோம் இன்னொரிடத்தில் அதையே மறுத்து இன்னொன்று பேசுகிறோம்" என்றும் சொல்கிறார் காங்கிரஸ் தலைவர். முன்னொன்று வைத்துப்பின்னொன்று பேசுகிறோம் என்று வெட்கமோ, வேதனையோ இல்லாமல் கூறுகிறார்!

காங்கிரஸ் ஆட்சிக்கு, அதன் தலைவர்களே இத்தகைய நற்சாட்சிகளை அளிக்கின்றனர்! கண்டிக்கின்றனர்! கபோதிகளாகி விட்டோம், போகும் பாதை மோசமெனத் தெரிந்தும் அதிலேயே நடந்து கொண்டிருக்கிறோம், என்று கூறுகிறார்!

'மாஜி' தலைவருடைய கூற்றும், இப்போதைய தலைவருடைய கண்டனமும் மக்கள் மன்றத்திலே நிலவும் அதிருப்தியின் எதிரொலிகள்!

இந்த எதிரொலிகளைச் சமர்ப்பிக்கிறோம், நமது தேசிய நண்பர்களின் சிந்தனைக்கு.

## டில்லி—அழகுவனம்!

டில்லி—அழகு ராணிகளின் உத்தியானவனமாகவும், வியாபாரிகளின் வேட்டைக் காடாகவும் ஆகிக்கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. வெளிநாட்டு வியாபாரிகள், விருந்தினர்கள், விளம்பரப் படுதாக்கள் எல்லாம் சமீப காலங்களில் மிக மிக அதிகமாக உலவ ஆரம்பித்திருக்கின்றனராம்.

இதன் காரணமாக அங்குள்ள போலீஸ்காரர்களுக்கு வேலை அதிகமாகி வேளைக்கு வேளை எங்கெங்கு யாரார் எப்படி எப்படி, இருக்கின்றனர் என்று கண்டுபிடிக்கவேண்டிய கஷ்டமான நிலை ஏற்பட்டிருக்கிறதாம்!

# ★ எதிரொலிகள்! ★

தேர்தலின்பொது மக்களுக்குதந்த றுதி மொழிகளை மறந்துவிட் டாம்! காற்றில் பறக்க விட்டுவிட் டாம்!!

சொன்னோம்—பல காரியங்களைச் ய்யப் போவதாக. ஆனால் அவை ள நாம்நிறைவேற்றவில்லை! ஒதுக்கி வத்துவிட்டோம்!!

தொழிற்சாலைகளைத் தேசிய மய க்கப் போவதாகக் கூறினோம்— ய்தோமா? இல்லை, அந்த எண் மே, நம்மிடமிருந்து மறைந்து ட்டது!

முதலாளிகள் நம்முடன் ஒத்து மக்க மறுக்கின்றனர்—நம் தலையி க்கின்றனர்! தவிக்கச் செய்கின்ற ர்!!

தேசிய மயமாக்குவோம், எல்லா ற்றையும் நாமே எடுத்து நடத் வோமென்றால் அதற்குப் பணம் ல்லை! பணம் கிடைக்க வழியில்லை!!

வரிக் குறைவு செய்தால் அது தலாளிகளுக்கே சலுகையாகிவிடு து—சகல நன்மைகளும் கிடைக் றது! ஜமீன்தாரிகளை ஒழிக்கத் யங்குகிறோம், முடியுமா என்று ட்கிறோம், அவசரம் ஏன் என்று சால்கிறோம்!

தேர்தலின் போது கூறிய பல பல்களைச் சாதிக்க நாம் தயங்கு றோம்! பின்வாங்குகிறோம்!!

பெரிய அணைக்கட்டுகளைக் கட்ட டியவில்லை, குடிசைத் தொழில் ள முன்னேறச் செய்ய வழியில்லை ன்று திகைக்கிறோம்! திண்டாடு றோம்!!

முன்னொன்று பின்னொன்றுப் க் றுகிறோம், நமது வார்த்தைகளில் றுதியில்லை, இங்கொன்றும் அங் ன்றுமாகப் பேசுகிறோம், ஸ்திர ல்லை! சரியான நிலையில்லை!!

X X X

"சிக்கலான அரசியல் பொருளா ர நெருக்கடிகள் ஏற்பட்டால் த நாட்டிலும், எந்தச் சர்க்காரும் ஜினமா செய்வதுண்டு!

அதுபோல, இவர்களும், சர்க் கரை நெருக்கடி போன்றவைகளின் போது விலகியிருந்தால் நான் வர வேற்றிருப்பேன்—மகிழ்ந்திருப்பேன்!

குழந்தைகள் திண்டாடுகின்றன சர்க்கரை கிடைக்காதால் — ஓலமிடு கின்றனர்!

ஆனால் சொன்ன விலையைக் கொடுத்து வாங்க முடிந்தவர்களுக்கு மட்டும் 'டன்' கணக்கில சர்க்கரை கிடைக்கிறது! இதுபோன்ற நெருக் கடிகளின் போது சர்க்கார் "போய்" விடுவதால் எந்தவித வருத்தமும் இருக்காது, ஏற்படாது!"

X X X

சர்க்கார் மீது கண்டனக் கணை களை வீசியிருக்கிறார், ஒருவர்!

இன்னொருவர், இந்தச் சர்க்கார் சர்க்கரைப் பிரச்னையின் போது ராஜினமா செய்திருந்தால் யாரும் வருத்தப்பட்டிருக்க மாட்டார்க ளென்கிறார்!

இத்தகைய வார்த்தைகளை வீசின வர்கள் எதிர்க்கட்சிக் காரர்களல்ல! 'சமான்ய' தேசியத் தொண்டர் களோ, கூட அல்ல!

முன்னவர் காங்கரஸ் தலைவர்— இன்னொருவர் காங்கிரஸ் தலைவராக இருந்தவர்! காங்கிரஸ் கட்சியின் தலைவரும், தலைவராக இருந்தவரும் "தங்கள்" சர்க்காருக்குத் தந்திருக் கும் 'சர்ட்டிபிகேட்' இது! சொன் னோம்—எல்லாவற்றையும்; இன்று காற்றில் பறக்கவிட்டு விட்டோம், பண முதலைகள் ராஜ்யமாகிவிட்டது என்கிறார் இப்போதைய காங்கிரஸ் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாரா மையா. இந்த சர்க்கார், சர்க்கரைப் பிரச்னையின்போது, சமாளிக்க முடி யாத காரணத்தால் ராஜினமா செய் திருந்தால் யாரும் வருத்தப்பட் டிருக்க மாட்டார்கள் என்று கூறு கிறார்—முன்பு காங்கிரஸ் தலைவராக யிருந்தவரான ஆச்சாரியகிருபளானி!

விந்தையல்ல, உண்மை! இவர் களிருவரும், ஒருவர்பின் ஒருவராக இத்தகைய 'பட்டமளிப்பை' நடத்தி யிருக்கின்றனர்—அதுவும், பொதுக் கூட்டத்திலோ, நண்பர்கள் கூடிப் பேசியபோதோ, விளையாட்டிற்கோ, கேலிக்கோ பேசப்பட்டதல்ல! கார சாரமான வாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், இந்திய சட்ட சபையில் இத்தகைய 'பட்டமளிப்பு விழாவை' நடத்தியிருக்கின்றனர்!

X X X

மேலே கூறும், குற்றச்சாட்டுகளை நாமோ அல்லது வேறு எதிர்க்கட்சியி னரோ, கூறினால் அதற்குப் பரிசுக ளாகத் தடியடி, துப்பாக்கிக் குண்டு கள், சிறைஆகியவைகள்தான் வழங் கப்படுகின்றன!

எனவே, இந்தக் கூற்றுக்களை காங்கிரஸ் நண்பர்களுக்குச் சமர்ப் பிக்கிறோம், காணுங்கள், வேறுயாரா வது இவைகளையே கூறினால் சீற்ற மும் சினமும் உருவாகிறதே, இப் போது அதே குற்றச்சாட்டுகள் எங் கிருந்து வந்திருக்கின்றன என்று பாருங்கள் — சிறிது சிந்தியுங்கள் என்ற வேண்டுகோளுடன்.

நாட்டை ஆள்வது காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களின் அர சாங்கம். அந்த அரசாங்கத்தை ஏற்று நடத்தும் கட்சியே, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களைக் கண்டிக்கிறது — கிண்டல் செய்கி றது! காங்கிரஸ் கட்சியின் தலைவ ராக இருந்தவர், இந்த அரசாங்கம் போவது குறித்து எவருக்கும் வருத் தம் ஏற்பட்டிருக்காது என்று கூறு கிறார்! எவருக்கும் ஏற்பட்டிருக்கா தாம் வருத்தம்—கூறுகிறார் கிருப ளானி. இன்றும், அவர் ஒரு காங்கி ரஸ் பிரமுகர், காந்தியார்வழிகளையே பின்பற்றி வருவதாகக் கூறிக் கொள்பவர். அவர் கூறுகிறார், இது போல, இந்த ஆட்சி போனால் எவ ருக்கும் வருத்தமோ ஆயாசமோ ஏற்படாது என்று!

கிருபளானிகூட முன்னாள் காங்கி ரஸ் தலைவர்—ஆனால் இப்போது காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கும் பட்டாபியே கண்டிக்கி றார், சொன்னதைக் காற்றில்பறக்க விட்டு விட்டோம் என்று வெளியிடு கிறார்—

(6-ம் பக்கம் பார்க்க)

## பொங்கல் மலர்

பொங்கல் திருநாளை முன்னிட்டு,
"திராவிட நாடு"
56 பக்கங்களுடன்
எட்டணு விலையில் வெளி யிடப்படும்.

ஏஜண்டுத் தோழர்கள் தங்களுக்குத் தேவையான காப்பிகளுக்கு 3—1—50-க்குள் தெரிவித்துவிடவும். பொங்கல் மலர், வாசகர்களுக்குப் பொங்கலன்றே கிடைக்கக்கூடியதாக 13—1—50-ல் இங்கிருந்து அனுப்பப்படும்.

மானேஜர்.


திராவிட நாடு

ஞாயிறு] 25—12—49 [காஞ்சி


# திருச்சியும் மகிழ்ச்சியும்

"அலறினேன், துடித்தேன், உயிர் போய்விடுமோ என்று தவித்தேன்—என் அங்கமெல்லாம் நடுங்கியது—இதற்கா இவ்வளவு பாடுபட்டோம்? அரும்பு மலர்வதற்குள் கருகுவதா, பிறந்து வளரும் பெறற்கரிய செல்வம் என் குழந்தை, இப்படி இறப்பதா, வேண்டுமென்று வீசப்பட்ட அம்புக்கு இரையாவதா, ஐயோ என்று அலறினேன்!

நான் சிறிதுகூட எதிர்பார்க்கவில்லை இப்படித் தவழ்ந்து விளையாடும் என் தங்கத்தின் மீது, அம்பு வீசப்படும் என்று! இருந்தாலும் எய்து விட்டனர்; எய்தவர்களைப் பற்றி நினைப்பதைவிட, என் குழந்தையைப் பார்ப்பதே நல்லதென்று பார்த்தேன்! இப்படியா, இதனுடைய வாழ்வு முடியவேண்டும் என்ற வேதனை நெஞ்சைசக்குநூறுக்கியது! சிரித்து விளையாடிய சிறுசு, தன்குறு நடையால், கொவ்வைச்சிரிப்பால் எங்களை—சூழஇருந்தோரை—மகிழ்வித்த மகவு! இப்படித்திடீரெனவீசப்பட்ட அம்பால், சாவதா! நினைக்கக் கூட முடியவில்லை; என்னுடைய இதயம் குமுறியது! கொந்தளித்தது!! இதற்காகவா டா செல்வமே, உன்னை நான் இவ்வளவு சீரும் சிறப்புமாய் வளர்த்தேன் என்று வாய்விட்டுக் கதறினேன், ஓலமிட்டேன்!

அடிபட்டுவிட்டது—சரியான அடி—அதுவும் வயிற்றில்! எங்கே இனி பிழைக்கப் போகிறது, அவ்வளவுதான் என்றனர் பக்கத்து வீட்டுக்காரர்கள்—அவர்கள் அனுதாபம் காட்டுவது போல நெடுநாளைய அருவை வெளியிட்டனர். இறந்துவிடுமாம்! நான் பெற்ற குழந்தை!! இதை என்னெதிரிலேயே, அது அம்பு அடிபட்டதால் துடித்துக் கொண்டிருந்தபோது சொல்லினர்! துணிச்சல் ஏற்பட்டிருந்தது, அவர்களுக்கு, குழந்தை செத்துவிடும், பின் இவள் பித்தம் பிடித்தவளாகி விடுவாள் என்ற பேத நினைப்பால்!

ஆனால், அடிபட்ட என் குழந்தை சாகவில்லை!பிழைத்துவிட்டதுமல்லாமல் அதோ புன்சிரிப்போடு,பூரித்து, 'அம்மா, அம்மா,' என்று என்னை அழைக்கிறது! அம்பு பட்டதும் உண்மை, அடிப்பட்டதும் உண்மைதான்,காயமும்பலமானதுதான், குருதியும் கொட்டிற்று—இதைக் கண்ட என் எதிர்வீட்டுக்காரி முடிவும்தான் கட்டினாள், இறந்துவிடும் என் குழந்தை என்று! ஏனோ, அவளுக்கு என் குழந்தையின் அழகு மீது அவ்வளவு ஆத்திரம் என்று நான் துடிதுடித்தேன்!

இன்றோ, அதோ, என் அருமை மகன் ஓடி ஆடுகிறான், உட்காரமாட்டேனென்கிறான். அவன் உடலிலே அம்பு பட்டதால் ஏற்பட்ட காயமும் மாறிவிட்டது—வளர்ந்து கொண்டிருக்கிறான், முன்பைவிட இப்போது எவ்வளவு அழகாக வளர்ந்து விட்டான்! என்ன பேச்சு! எவ்வளவு எக்காளம்!"

• • •

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் இதயங்களிலே கூத்தாடும் எக்களிப்பு, பெருமகிழ்ச்சி பேரார்வம் இது, இன்று! பெற்றெடுத்து வளர்த்த குழந்தையின் வாழ்வு, அம்புவீச்சால் அடிபட்டதைக் கண்டதும், எங்கே, இறந்து போய்விடுமோ என்று ஏங்கி, ஈனக்குரலில், என்ன செய்வேன் இனி, இதற்கோ பாடுபட்டேன் இத்தனை நாள் என்று கதறித் துடித்த தாயைப்போல, அழுதனர், ஐயோ வென்று அலறினர், கண்ணீர்த்துளிகளைச் சிந்தினர், கதறினர், கிட்டத்தட்ட ஐந்து மாதங்கட்கு முன்பு!

இருள் படிந்து கிடந்த, நாட்டு வாழ்விலே, புதுமை ஒளி பரப்பும், 'விடுதலை வீரன்', 'புரட்சி இயக்கம்' என்று பல பெயர்களால் அழைக்கப்பட்ட, குழந்தை பிறந்து, அருமையாகவளர்க்கப்பட்டு,வந்தது திராவிட சமுதாயத் தாயால் — மகிழ்வுடன், முகமலர்ச்சியுடன், பெறும் பேறு பெற்றோம் என்ற பூரிப்புடன்! தத்தித் தவழ்ந்து, தளிர்க்கை நீட்டி, சிங்காரமாகச் சிரித்து, எழும்பிய சேயின் வயிற்றிலே, எதிர்பாராத நிலையில் வந்து தைத்துப் பாய்ந்தது ஒரு அம்பு—அதைக் கண்ட தாய் கதறினாள், கண்ணீர் வடித்தாள், தேம்பினாள், திகைத்தாள்!

திராவிடர் கழக வளர்ச்சி கோட்டத்திலே 'ஏற்பட்ட' பேரிடி போன்ற நிலையைக் கண்ட திராவிடப் பெருங்குடி மக்களின் உள்ளமும் உணர்ச்சியும் ஐந்து மாதங்கட்கு முன்பு — தாமரையிலைத் தண்ணீராகத் தவித்தது, பாடுபட்டு வளர்த்த குழந்தை எங்கே பறி போய்விடுமோ என்ற பயத்தால்—படபடப்பால்!

அந்த நிலை இன்று மாறிவிட்டது. பொங்கும் பூரிப்பால், எழும்பும் இதய மகிழ்வால், குதூகலித்து நிற்கின்றனர், தங்கள் உழைப்பால், புது மகிழ்வும் புது உணர்வும் பூத்துக் குலுங்கும் பொன்னாட்கள் மலர்ந்து,—மணம் வீசுவது கண்டு! நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், இது நமக்கேஉரிமை யென்பதறிந்தோம் என்ற உரிமை முழக்கமும், மகேஸ்வரன் என்ற பெயர் கூறி ஆண்ட மாபினரின் அறிவைச்

## ஜனவரி 1-ல் திருச்சி மாவட்ட மாநாடு

சூன்யமாக்கும் குள்ளநரிகளின் குறு கிய செயல்களை வெட்டி வீழ்த்து வோம் என்ற வீரமுழக்கமும், உழைப்பவன் ஊர்க்கோடியில் கிடக் கிறான், உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், இல்லாது, அவனைப் பாரீர், அவன் குறை தீர்க் கும் நாளைக் காண விரைந்தோடி வாரீர்! என்று சமரச சங்கநாதமும் செய்து கழக வீரர்கள் திக்கெட்டும் 'திக்விஜயம்' செய்து, நாடு பூரிக்க, கேட்பதா இவர்கள் பேச்சை என்று காதமுடிய கனவான்களும் களித்து வர, இன்று திராவிட முன்னேற்றக் கழகம்—அறிவுப் பணியை முன்பை விட அதிகமான அளவில செய்து வருகிறது! எதிரிகள், கிண்டல் புரிந் தோர், எங்கே இதுகள் வாழப் போகிறது என்று வாழ்த்தியவர்கள் திகைக்க—வெகு வேகமான அள வில்!

* * *

வெற்றியும், பூரிப்பும் நமது இத யங்களிலே கூத்தாடுகின்றன! நமது பணிக்கு நல் வரவேற்பும், பாராட் டும், வாழ்த்தும் பல திசைகளி லிருந்து வந்து குவிந்துகொண்டிருக் கும், மகிழ்ச்சி நாட்களிலே, புத் தாண்டின் முதல்நாள் திருச்சிமா நகரிலே, மாவட்ட மாநாடு கூடுகிறது!

திராவிட முன்னேற்றக் கழகத் தின் முதலாவதுமாநாடு கூடுகிறது!

கழகம் முகிழ்த்த நான்கு மாதங் களுக்கெல்லாம்—கூடுகிறது—முதல் முறையாக! நாற்பதுக்கு மேற்பட்ட கிளைக் கழகங்களை நாடு நகர் பட்டி தொட்டி எங்கும் நிறுவிவிட்டு, மாநாடு கூடுகிறது மாவட்டத்தின் தலைநகரிலே!

மாநாட்டைக் கூட்டுவிப்பதில் முனைந்து நின்று பணியாற்றும் தோழர்கள், வரவேற்புக் கழக நண் பர்கள், அத்தனை பேரும் உழைப் பின் உருவங்கள், இலட்சியமே எங் கள் வாழ்வு என்று எண்ணும் இத யங் கொண்ட வீரர்கள், எங்கள் பணி இந்நாடு எங்கும் எங்கள் கொள் கைகளை விதைப்பதே, என்ற எக் களிப்புக் கொண்ட இளைஞர்கள்! எனவே, திருச்சி மாவட்ட மாநாடு சீரிய முறையில், வெற்றி விழா வாக இருக்கும் என்பதில் ஐயமில்லை! மாநாடு என்றால் ஏதோ, நாலுபேர் வந்தனர், 'நல்ல பேச்சுக் கச்சேரி' நடைபெற்றது என்று கூறிக்கொள் ளும் நிலை கொண்டதல்ல திருச்சி யிலே கூடும் மாநாடு! மாவட்டக்கழ கத்தொண்டர்களின் முகாம்! உழைப் பின் உருவங்களின் கூட்டம்!

நினைத்தபோது கூட்டுவோம் ஏதாவது ஒன்று நடைபெறவேண் டுமே, எனவே நடத்துவோமே ஒரு மாநாடு என்ற எளிய எண்ணத் திலே நடைபெறுவதல்ல இம்மாநாடு. இம்மாநாடு நடைபெறுவதற்கும், முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட தற்கும் இடையிலே உள்ள நான்கு மாதங்களில், மாவட்டத்தின் பல பாகங்களிலும் ஏற்பட்டிருக்கும் கிளைக் கழகங்களின் 'பட்டியலை'ப் பாருங்கள்.

திருச்சி
மலைக்கோட்டை
பெரியகடைவீதி
காலனி
மார்சர்பேட்டைரோடு
சோமாசம்பேட்டை
சோபனபுரம்
துறையூர்
கரூர்
புதூர்உத்தமனூர்
மணமேடு
சீரங்கம்—திருவானைகா
தாத்தையங்கார்பேட்டை
செயங்கொண்டம்
லால்குடி
ஜ. ஆலமரத்துப்பட்டி
சோமாபுரி
தேவதானம்
புதுப்பட்டி
மண்ணச்சநல்லூர் 
திருவரம்பூர்
ஆழூர்
அம்பில்
சந்நாசிநல்லூர்
துலையநத்தம்
கல்லணை
மேலக்கற்கண்டார்கோட்டை
புதுக்கோட்டை
அரண்மனைசிறுவயல்
துவிந்தலை
உறையூர்
ஆலங்குடி
தவுட்டுப்பாளையம்
மணப்பாறை
மேட்டுப்பாளையம்
பன்றுவர்கொம்பு
புகலூர்

இன்றுவரை, திருச்சி மாவட்டத் திலே முகிழ்த்திருக்கும் முன்னேற் றக் கழகங்களின் தொகை இது! நல்ல அமைப்பு முறையில் இத்தனை இடங்களிலும் உதயமாகிப் பணி யாற்றி வருகின்றன! இந்த நேரத் தில், கிட்டத்தட்ட நாற்பது கிளைக் கழகங்கள் ஏற்பட்டபின், முறைப் படி, இம்மாநாடு கூட்டப்படுகிறது! மாநாட்டிற்குத் தோழர் ஈ. வே. அ. வள்ளிமுத்து — பாண்டிய மண்டல வீரர் தலைமை தாங்கு கிறார். கோவில்பட்டியின் நகர சபைத் தலைவராக இருந்து, நற்பணிகளைச் செய்து வருபவரும், சீரிய நோக்கமும் செயல் புரியும் வன்மையுங் கொண்ட, தோழர் அவர். அவரைத் தலைவராகவும், மாநாட்டை ஆரம்பித்து வைப்பவ ராகப் பெத்தாம்பாளையம் தோழர் பழனிச்சாமியையும் தேர்ந்தெடுத் திருக்கின்றனர்—மகிழ்ச்சி நமக்கு! தோழர் பழனிச்சாமி — கொங்கு நாட்டுத் தொண்டர் தலைவர், விவ சாயத் திறனும், குடியானவர்களின் வாழ்வு நலனைக் குறிக்கோளாகவும் கொண்டவர்.

இன்னும், முன்னேற்றக் கழக வர லாற்றில் முதலிடம் பெறும் இம் மாநாட்டில், எல்லாக் கழக வீரர் களும், பேச்சாள நண்பர்களும் கலந்து கொள்கிறார்கள் என்று அறிகிறோம். திருச்சி, முன்னேற்றக் கழகம் முன்னேறும் பிள்ளைகளின் முரசொலி எழுப்பும் இடமாக, 1—1—1950 அன்று விளங்கப் போகிறது! வீரர்கள் யாவரும்கூடப் போகிறார்கள், வெற்றிப் பணி குறித் துத் திட்டம் தீட்டப் போகிறார் கள் திருச்சி மாவட்டத்துக்கு! வீரர் படையின் அணிவகுப்பும்,

## அன்று இரவு "சந்திரமோகன்" நாடகம்

வெற்றி முழக்கமிடும் தொண்டர் கூட்டமும், 'வெட்டி வா, என்றால் கட்டி வந்தேன்' என்று விரைந்தோடிப் பணிபுரியும் தோழர்களின் படைவரிசையும் அன்று அங்கு கூடப் போகிறது! முரசமும், சங்கும் சேர்ந்து முழங்கப் போகிறது!

* * •

முன்னேற்றக் கழகம் முகிழ்த்த பின், முதல் முதலாகத் திருச்சியிலே நடைபெறப் போகும் இம் மாவட்ட மாநாடு எல்லா வகைகளிலும் ஒரு வெற்றி விழாப் போலப் இருக்குமென்றே நம்புகிறோம். திருச்சி — ஏனைய மாவட்டங்களுக்கும் வழிகாட்டியாக இருக்குமென்று நம்புகிறோம். நம் இதயத்தில் அந்த ஆசை எழும்புகிறது—அதை நமது வீரர்கள் சாதிப்பார்கள் என்ற நம்பிக்கையும் ஒளிவிடுகிறது!

✲

பழைமையையும் பாசிசத்தையும் எதிரிகளாகக்கொண்டு, அவைகளை வீழ்த்தி வெற்றி பெற அணிவகுத்து நிற்கும் நமது பணி—இலேசானதல்ல. எனவே, கூடிக் கலைவதும், தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டுச் செல்வதும் நமது இலட்சியமாக இனி நமது எண்ணத்தில் இடம்பெறாது.

சொற்கள், வாயிலிருந்தல்ல, இதயத்திலிருந்தே வெடிப்பவையாக இருக்கவேண்டும். வேதனை நிரம்பிய சமுதாய வாழ்வை, பாலை வனமாகக் கிடக்கும் நாட்டை, அறிவும் செல்வமும் கரைபுரண்டு ஓடுமாறு செய்ய நாம் மேற்கொண்டிருக்கும் தொண்டு — பட்டத்தையோ பாராட்டையோ பரிசையோ நமக்கு வழங்குவதல்ல! இவை நமக்கு எட்டிக்காய்கள் – எட்ட முடியாதவை என்ற எண்ணத்தாலோ 'ஏன்?' இந்தப் பழம், புளிக்கும் என்ற சூது நினைவாலோ அல்ல—நினைத்தால் "பல" இல்லாவிட்டாலும் 'சில'வாவது பெறும்படியான வகையுமுண்டு, வழியுமுண்டு—மக்கள் ஆதரவும்உண்டு! அவைநமக்குக் கசக்கும் காய்கள், நமது பணி, கனியைக் காணுவதற்கு, காயையும் பிஞ்சையும் கண்டு மகிழ்ந்து பறித்துப் பின் பரிதாபப்படும் தகைமையதல்ல!

'கோழைகள் விலகி நிற்கட்டும், வீரர்கள் எத்தனை பேர்!' என்று கேட்கும் வீரப் பரணிபாடி, வெளிக்கிளம்பி விட்டவர்கள்தான் நாம். இந்த வேதனையும் சோதனையும் நிலவும் சமுதாயத்தை, சாக்கடை நாற்றம் போக்கி, சந்தன மணம் கமழும் இடமாக, இன்ப வீடாக, இந்நாட்டை சீராக அமைக்கும் செயல் புரியப் புறப்பட்டு விட்டவர்கள் நாம்!

"ஏறு, ஏறு, வேகமாக முன்னேறு; சறுக்குப் பாதைதான், செங்குத்தான குன்றுதான், கல் இடிக்கலாம், முள் குத்தலாம், மோசம் விளையலாம்; இருந்தாலும், முயற்சியை இழக்காதே, இகழ்ச்சிக்குள்ளாகாதே, ஏறிச் செல்!" என்பதையே நமது இதயகீதமாக ஆக்கிக் கொண்டுள்ளோம்!

எத்தனை எத்தனையோ ஆண்டுகள், ஆயிரக் கணக்கான வருடங்கள், சீர்கெட்டுச் சிதைந்த ஒரு வாழ்வை நிமிர்த்தும் பணி நம்முடையது — கூனலை நிமிர்ப்பதுபோல, குருதி குடிக்கும் சிங்கத்தை எதிர்ப்பதைப் போல!

எனவே, நம்முடைய இந்தப் பணி, 'ஏனோ, தானோ' வென்று நினைக்கக்கூடியதோ, நீண்ட பெருமூச்சுடன் விட்டுவிடுவதோ, கைதட்டுதல்களைப் பெற்று 'கனம்'களாக ஆகிவிடுவதோ அல்ல!

நமது இதயம்—நகரங்களில் மட்டுமல்ல, பட்டிதொட்டிகளிலும், குமுறும் விவசாயி அழுகுரல் எழுப்பும் பாட்டாளி ஆகியோரிடை மட்டுமல்ல, வாழமுடியாது தவிக்கும் மத்தியதர வர்க்கம் — எல்லோரிடையும் பதிந்து கிடக்கிறது! நமது பணி, அங்கெல்லாம் வேகமாக, இன்னும் வேகமாக, வர வர வேகமாகப் பரவ வேண்டும்! அதுதான் இன்று நம்முடைய இலட்சிய வரலாற்றின் அரிச்சுவடி—முதல் வேலை

✲

மாவட்ட மாநாட்டைக் கூட்டுகிறார்கள், திருச்சி மாவட்ட நண்பர்கள்—இயக்கத்தின் இருதயங்கள்! திருச்சி — மகிழ்ச்சி தருகிறது நமக்கு, உள்ளத்தில் குதூகலம் உண்டாக்குகிறது! அவர்கள், பணி பாராட்டக்கூடியது—குறுகிய காலத்தில் இத்துணைக் கிளைக் கழகங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர்! இயக்கக் கொள்கைகள், புயல் வேகத்தில், மக்கள் மனதிலே மலரப் பணியாற்றியுள்ளனர்—இந்தப் பணி, இன்னும் பன்மடங்காக வேண்டும், எங்கு பார்த்தாலும், கிளைக் கழகங்கள் எழும்ப வேண்டும், நமது எண்ணங்கள் பரவவேண்டும், மக்கள் மனதிலே மலர்ச்சி எழும்பவேண்டும்—இதற்கான திட்டங்களை மாவட்ட மாநாடு வகுத்துத் தரும் என்று நம்புகிறோம்! வளர்க அவர்கள் தொண்டு, வாழ்க அவர்கள் என்று வாழ்த்துகிறோம், நமது இதயத்திலிருந்து எழும்பும் மகிழ்ச்சி கொண்டு.

சென்னை

தி. மு. க.

மாவட்ட மாநாடு

★

15—1—50-ல்

சென்னையில்

நடைபெறும்!

### வருந்துகிறோம்

—O—

முல்லைக்கொம்பை நமது நண்பர், இயக்கத்தோழர் M. P. வடிவேல் அவர்களின் சகோதரியாரும் தொகரப்பல்லி D. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தம்பி தோழர் இராமமூர்த்தியின் துணைவியாருமான தோழியர் சரோஜினி திடீரென்று தமது 22-வது வயதில் காலமானார் என்பதையறிய மிகவும் வருந்துகிறோம். அருமைச் சகோதரியை இழந்து ஆற்றமுடியாத் துயரத்துக்குஆளாகியிருக்கும் தோழர் M. P. வடிவேல் அவர்களுக்கும் அவரது தம்பி சத்தி அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# வாழ்க இந்தோனேஷியா!

★ ★ ★

சிறை! அடக்கு முறை! ...வைகளுக்கு முற்றுப் ...ள்ளி வைக்கப்படுகிறது இந்தோ...னேஷியாவில், எத்தனையோ ஆண்டு...களாக அவர்கள் உள்ளத்திலே ...கொழுந்துவிட்டெரிந்த விடுதலைத் ..., முற்றுப் பெற்று வருகிறது—...லி, புலியை ஆட்டிவைத்ததுபோல ...ச்சு ஆதிபத்தியத்தின் கீழ் அகப் ...ட்டு விழித்து, அல்லலுற்ற ...ந்தோனேஷிய மக்கள் வாழ்விலே ...தந்திரம் மலருகிறது—வெளிநாட் ...ப் பிடிப்பு விலகுகிறது! வரும் ...ந் தேதி முதல் இந்தோனேஷிய ...க்கியக் குடியரசு உதயமாகிறது—...ச்சு ஆதிபத்தியத்தின் கீழ் அடி...மைப்பட்டுக் கிடந்த மக்கள் வாழ் ...விலே "புதுமை" மலர்கிறது! வாழ்வி...னர் திருநாள் உதயமாகிறது!

அன்றைய தினம் டச்சு ராணி ...லியானா, இந்தோனேஷ்யாவுக்கு ...னது அதிகாரத்தை மாற்றிவிடப் ...போகிறார். இந்தோனேஷியா—சுதந் ...ர நாடாக—ஆகிவிடும்!

கடந்த உலகப்போரின் விளைவாக ...ச்சு ஆதிபத்தியத்தின் கீழிருந்த ...ந்தோனேஷியா, ஜப்பான் கைக்குத் ...றியது! ஜப்பானியர், ஜவா—முத...ய தீவுகளைக் கைப்பற்றினர்—பின் ...ப்பான் சரணடைந்தது. டச்சு ...க்கார் வெற்றி விழாக் கொண்டா...ற்று. மீண்டும் தன் ஆதிபத்தி...த்தை இந்தோனேஷியா மீது ...சலுத்த ஆரம்பித்தது! ஏற்...கனவே, பல்லாண்டுகளாக இந்தோ...ய மக்கள் மனதில், எங்கேயோ ...ருக்கும் டச்சுக்காரருக்கு இங் ...கென்ன வேலை! ஏன் அவர்கள் நம் ...ஜமானர்களாயிருக்க வேண்டும், ...ன்ற கேள்வி எழும்பி, விடுதலை! ...டுதலை!! என்ற வீரச்சொல, ஒவ் ...வொருவருடைய இதயத்திலும் ...திரொலித்துக் கொண்டிருந்தது—...ரிடை நேஷனல் இந்தோ...னேஷியா என்ற கட்சியின் கீழ் ...ன்று சுதந்திரமுழக்கம் செய்தனர்! ...ன்று முதல், தொடர்ந்து அவர் ...ருக்கும டச்சு ஆதிபத்தியத்துக்கு ...டையே போர், நடைபெற்றது!

பல மக்கள் களத்திலே பிணமா யினர்—பெற்றே தீருவோம் சுதந் தரம் என்ற வீர முழக்கங்களை எழுப்பி எதிரொலித்துக்கொண்டே! எனினும் எத்தனை நாட்களுக்குத் தான் 'எரிமலை'யை மூடிவைக்க முடி யும்! எனவேதான் டச்சு ஆதிபத் தியம், இன்று தன் பேராசையை ஒழித்து, வாபஸாகிறது, தன் ஆதிக்க ஆசையை விட்டு விட்டு!

இந்தோனேஷிய ஐக்கியக் குடியர சின் தலைவராக—டாக்டர் சுகர்னோ தேர்ந்தெடுக்கப்பட்டு டிசம்பர் 18ந் தேதியன்று பதவியேற்றுவிட்டார்!



சிறை! அடி! உதை! அடக்கு முறை! ஆகிய தியாக தழும்புகளைப் பெற்று உரிமை வேட்கைகொண்டு, போராடிய ஒரு வீரர் அவர்!

ஜாவா—விலையுயர்ந்த பொருள் களைக் கொண்டநாடு. செல்வமும் செழிப்பும், கொழித்துக் கிடந்தா லும், ஏழ்மை மக்கள் வாழ்விலே தெளிந்தது! செல்வமிருந்தும் ஏழை யராய், வறியராய், இல்லாதவராய், இருந்தனர் அவர்கள்! இது 'என்ன' என்று நினைத்தான், சிந்தித்தான், இக்குறை தீர்க்க முடியுமா, என்று எண்ணினான், இதுவே என் இலட்சி யம் என்று கூவினான்—அதன் முடி வாக அவன் வாழ்வு பொதுப்பணிப் பாதையில் திரும்பியது! அவரு டைய சேவையால், அயர்ந்து உறங் கிய இந்தோனேஷிய மக்கள் இதயங் களிலே 'விடுதலை' 'எமர்டிகா!' என்ற வீரமுழக்கம் எழும்பியது! மக்கள் மனதிலே சுதந்தரக் கனலை மூட்டி விட்ட குற்றத்திற்காகப் பன்முறை சிறையில் தள்ளப்பட்டார் — நாடு கடத்தப்பட்டார்!

சுகர்னோ—புதுக்குடியரசின் பிரத மராகப் பதவியேற்றிருக்கும் டாக் டர் ஹட்டா, முதலியோர் முஸ்லீம் மதத்தைச் சார்ந்தவர்கள். சுகர்னோ வின் முழுப்பெயர் டாக்டர் அப்துல் ரஹ்மான் சுகர்னோ.

48-வது வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் அவர் இளமை யிலிருந்தே தன் நாட்டின் முன் னேற்றத்தில், தன் மக்களின் வாழ் வுச் சிறப்பில் நாட்டங்கொண்டவர். கல்விக் கூடத்திலே படித்துக்கொண் டிருக்கையிலேயே சுகர்னோவின் மன மெனும் உலைக்கூடத்திலே வீரம், எழுச்சி, சேவை எனும் இலட்சியக் கருவிகள் கூர் செய்யப்பட்டன. தீவிரமாகப் பேசுவார், அதிகாரி களின் அரட்டல் மிரட்டலுக்கு அஞ்சமாட்டார், அதே வேளையில் படிப்பிலும் சிரத்தை கொள்வார். புதிதாக மலர்ந்த குடியரசின் பீடத்தை அலங்கரிக்கும் பொறுப்பு அவருக்கு கிட்டியிருக்கிறது. கல் லூரியிலிருந்து கிளம்பியதும், சர்க் காரின் அதிகாரியாகப் போயிருக் கலாம் — இருந்தாலும் அப்பக்கம் அவருடைய எண்ணம் திரும்ப வில்லை; மக்களின் கோரநிலைதான் அவருடைய கவனத்தைக்கவர்ந்தது!

"யானையைப் பூனை அடக்குவதா! 50-மடங்குக்குமேல பெரியதான ஜாவாவை, என் பிறந்த நாட்டை, சிறு நாடு, டச்சு ஆள்வதா! அக்கிர மம், அடுக்காது" என்று, அன்று அவர் முழக்கமிட்டது வீண்போக வில்லை! வெற்றிகிட்டிவிட்டது! நாடு விடுதலை பெற்றுவிட்டது, புதுக் குடியரசு மலரப்போகிறது!

அன்னிய ஆதிபத்தியப் பிடிப்பிலி ருந்து விடுபட்டு, வெற்றி விழா கொண்டாடப் போகும் 'இந்தோ னேஷியா வாழ்க, வளர்க மக்கள் சுதந்தரம், உயர்க அவர்கள் வாழ்வு!' என்ற மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

## சனாதனச் சமர்த்து!

—※—

இந்துமதச் சட்டத் தொகுப்பு மசோதாவை எதிர்த்து டெல்லி சட்டசபைமுன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றதல்லவா, சனாதனிகளாலும், பழைமைப் பித்தர்களாலும். அது குறித்துப் பம்பாயிலிருந்து வரும் வார இதழ் ஒன்றில் ரசமான தகவல் ஒன்று வந்திருக்கிறது.

நாம், அடிக்கடி கூறுவதுண்டு பழைமைக்கும் பணப்பெட்டிக்கும் இருக்கும் தொடர்பு எப்போதுமே அதிகம், இரண்டும் கணவன் மனைவி போல் என்றெல்லாம்! பழைமை ஒழிந்து புதுமை மலர்ந்தால், மக்கள் வாழ்வில் மலர்ச்சியல்லவா ஏற்பட்டு விடும்! பின், மாடமாளிகைகளும்—மண்குடிசைகளும் சமமாகவேண்டும் என்ற சங்கநாதமல்லவா எழும்ப ஆரம்பித்துவிடும்! ஆகவே, எப்போதும் பணதிபத்தியம் பழைமையின் காதலனாகத்தான் இருக்கும்—தன் சுகபோகத்தில் மண்விழுந்து விடாமல் தற்காத்துக் கொள்வதற்காக! அதை யொட்டியே, அது எப்போதும் சனாதனம், சாஸ்திரம், மதம், சப்பிரதாயம் ஆகியவைகளில் சிரத்தையும் சிந்தனையையும் காட்டுவது வழக்கம்—

இந்துமதத்தில் "சிறு" திருத்தம் செய்யச் சீறியெழுந்து உறுமிய சனாதனச் சங்கராச்சாரிகளுக்கும், சர்மாகளுக்கும், சாஸ்திரிகளுக்கும், டெல்லியில் சில பணமூட்டைகள் பக்கபலமாக இருந்தனவாம். 500-பேருக்குமேல் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்று நமது தேசியத்தினசரிகள் பிரசுரித்திருந்தன அல்லவா "கொட்டை" எழுத்துக்களில்! தெருவில் நின்றவன், அம்மா பிச்சை என்று பாடிச் சென்றவன், பைத்தியம் பிடித்தவன் எல்லோரையும் கூலிக்கமர்த்திக்கொண்டுவந்து முன் நிறுத்தி, அட்டகாசம் செய்யும்படி தூண்டினராம்!

ஒரு பெண்மணி, சட்ட சபையின் தலைவாயிலில் நின்று கூத்தாடினாளாம், அரை நிர்வாணத்துடன்! அவள் ஒரு பைத்தியமாம்—அவள் ஆடுவது கண்டு குழுமி நின்ற கூட்டத்தினர் கும்மாளமடித்தனராம்!

எப்படியிருக்கிறது பழைமை காக்கப்படவேண்டும் என்பதற்குச் செய்யப்படும் செயல்கள்! 'சேச்சே! நினைக்கவும் வெட்கமாயிருக்கிறது என்கிறீர்களா,' சொல்லாதீர்கள், இதுதான் 'ராம ராஜ்யம்!'

— —

## 'வன'வாசம்

— ❀ —

இந்தோனேஷியாவின் இந்திய அரசியல் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் சுப்பராயன்—குமாரமங்கலப் சீமான்—சட்டசபையிலே தனக்குக் கூறப்பட்ட நல்லுரைக்குப் பதில் கூறுகையில்,

"இந்த மாகாணத்தில் என்ன நடந்தது என்பதை நான் அறிவேன். இந்த மாகாணத்தின் எதிர்காலப் பொதுவாழ்வில் எனக்கு இடமில்லை என்பதையும் அறிவேன். எனவே அயல்நாடு சென்றாவது அங்கிருந்து நாட்டுக்கு உழைக்க இயலாதா என்று நம்பியே இப்பதவியேற்றேன்"

என்று கூறியுள்ளார்! அரசியல் வாழ்விலிருந்து 'வனவாசம்' செல்லப் போகிறேன் என்று வருத்தத்துடன் வெளியிட்டுள்ளார் — டாக்டர் சுப்பராயன். இந்த மாகாணத்தில் என்ன நடந்தது என்பதை, அறிவேன் என்று கூறுகிறார்!

ஆட்சியாளரின் போக்குப் பிடித்தமில்லை போலும் என்று கூறலோ, அவரே, மந்திரியாக இருந்து மனம் போன போக்கில் நடந்தவர்! காங்கிரஸ் கட்சிமீதுவெறுப்புத் தோன்றிவிட்டது போலும் என்று எண்ணவோ, இன்றும் அவர் காங்கிரஸ்காரர்தான்—இருந்தும் 'இனி இங்கு எனக்கு இடமில்லை! என்று கூறுகிறார்!

வேதனையுடன் வெளியிடுகிறார்! அவர் ஒரு பெரிய குதிரைப் பந்தய வீரர்—கிரிக்கெட் நிபுணர் என்று கூறுவார்கள் — அதன் காரணமாக 'ஓரிடத்திலும்' அவர் கால் நிலைத்து நிற்காது என்று கூறுவார்கள்—அதுகூடப் பொய்யாகி விட்டது, அவர் நீண்ட காலம் காங்கிரசிலேயே இருந்து வருவதால்!

ஆகவே 'வனவாசம்' போகவேண்டிய அளவு தொல்லையும் சூழ் நிலையும் எப்படித்தான் ஏற்பட்டதோ! நமக்கென்ன தெரிகிறது, பாவம், இவருக்கா இந்த நிலை என்று பரிதாபந்தான் ஏற்படுகிறது!

✻

## ஐயோ பாவம்!

———

"ஒரு விக்கிரகம் எப்படி இருக்கிறதோ ஆடாமல் அசையாமல் அது போன்ற நிலைதான் கவர்னர் ஜெனரலாக இருக்கும் எனக்கும்" என்று முன்பு ஒருமுறை கவர்னர் ஜெனரல் இராசகோபாலாச்சாரியார் கூறினார். ஒரு கோயிலிலுள்ள விக்கிரகத்தால் ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், அதனால்தான் எல்லாக் காரியங்களும் உலகில் நடைபெறுகின்றன என்று பக்தகோடிகள் பாமர மக்களுக்குக் கூறுகின்றனர்.

இந்திய சர்க்காரில் இப்போது வேலை பார்க்கும் கவர்னர்களின் பரிதாபகரமான நிலையையும் கோயில்களிலுள்ள விக்கிரகங்களின் நிலையோடு ஒப்பிடக்கூடிய முறையிலேயேதான் சர்க்கார்தேச பக்தசர்க்கார் நடத்துகிறார்கள். இந்த உண்மையை, ஐக்கிய மாகாண கவர்னர் சர் ஹோமி மோடி அவர்கள் தம்முடைய அனுபவத்தால் விளக்குகிறார்.

"நான் பதவி ஏற்றபின் என் உத்தரவின் பேரில் பல அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப் படுவதைக் கண்டேன். ஆனால் அவற்றைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது......தனி நபர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் செய்திகள் அனுப்பும் 'சித்திரவதைக்கும் நான் உள்ளாகவேண்டியிருக்கிறது"

என்று 17—12—49-ல் லட்சுமணபுரியில் பேசியிருக்கிறார். உண்மையிலேயே நம் நாட்டுக் கவர்னர்களின் பரிதாப நிலையை நினைக்கும்போது 'ஐயோ பாவம்' என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

### சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள் தங்கள் பாக்கியை 5—1—50-க்குள் அனுப்பாவிட்டால், பொங்கல் மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாதென்பதையும், சந்தா ரத்து செய்யப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி.

## பகுத்தறிவு ஒரு பகலவன்

4-ம் பக்கத் தொடர்ச்சி

தேவதூதர்'கள் எனப் போற்றப்படு வார்களோ, அவர்கள் வாக்கு 'தேவ வாக்கு' என்று கூறப்படுகிறதோ, அதேபோலவே, இந்தியாவில் அரசி யல் தலைவர்களுக்கு அரசியலில் இட மளிக்கப்பட்டிருக்கிறது — மதிப்பும் 'பக்தி'யும் காட்டப்பட்டு வருகிறது!

மதிப்பு வேறு; பக்தி வேறு; ஆனால், இந்நாட்டில் மதிப்பைவிட 'பக்தி' மனோபாவம் பரப்பப்பட்டு விட்டது. அரசியல் தலைவர்களை அடுத்த 'கடவுள்' என்று பூஜிக்கப் படும் மனோபாவம், வளர்ந்துவிட் டது. இதன் விளைவு, பூஜைக்குரியவ ராகப்போற்றப்படுகிற தலைவர், தவ றாக நடக்க நேர்ந்த கொண்டால்கூட 'அதுதான் சரி' என்று கூறப்படும் அளவுக்குப்பக்தி மனோபாவம் படம் எடுத்தாடுகிறது!

பக்தி–பகுத்தறிவைக் கொல்லும், பகுத்தறிவுவளராவிடில்,எதேச்சாதி காரம் வெகு வேகமாக மக்களைத்தன் இரும்புப் பிடியில் சிக்கவைக்கும்.

இதை டாக்டர் பராஞ்சிபே நன்கு தெளிவு படுத்தியுள்ளார், அதே சமயம், தேச'பக்தி'யென்பது 'வெறி' யாக மாறிவிட்டதென்றும், இளைஞ ருலகம் இனியாவது இந்த வெறிவலை யில் சிக்காமல், விருப்பு வெறுப்பு அற்ற சம நிலை நின்று நல்லதொரு சமுதாயத்தை, நாட்டு நிலையை அமைக்கவேண்டும் என்றும் அழைத் துள்ளார்.

*  *  *

உணவுப் பிரச்னை பற்றி அவர் குறிப்பிடுகையில், மனித சமுதாயம் வளர்ந்துகொண்டிருக்கிறது, மக்கள் வளர்ச்சி, ஆண்டுக்கு இலட்சக்கணக் கில் போய்க்கொண்டிருக்கிறது. இதைச் சரிப்படுத்த பகுத்தறிவு தான் பயன்படவேண்டும். 'பாவ மச்சே'! கர்ப்பத்தை தடை செய்ய லாமா? என்ற பழங்கதை பேசிப் பயனில்லை, சிந்தனைக்கு வேலை தந்து அவசியமா இது, என்று அறிவு கொண்டு ஆராய்ந்து ஆவன செய்யப் படுதல் வேண்டும்" என்று கூறியுள் ளார். கர்ப்பத்தடை—சுயமரியாதை இயக்கம் அன்று முதல் சொல்லி வருவதாகும்.

பெரிய திட்டங்கள் போட்டு விடு வதாலோ, அல்லது அவைகளை நிறைவேற்றி வைத்துவிடுவ தாலோ மட்டும், உணவுப் பிரச் னையைத் தவிர்த்துவிடமுடியாது. மக் கள் தொகை வளர்ந்துகொண்டிருக் கிறது—அந்த அளவு உணவுற்பத் தியை வளரச்செய்வது சாத்தியமான தல்ல, அதைத்தவிர்த்து, ஏதாவது ஒருவழி காணவேண்டுமென்றால், அதற்குள்ள ஒரேவழி கர்ப்பத் தடைதான். பகுத்தறிவுவாதிகள் என்று பலபடக் கூறிக்கொள்பவர் களுக்குக்கூட, கர்ப்பத்தடை, என் பது கலக்கத்தைக் கொடுப்பதாகவே யிருக்கிறது. கலக்கநிலை, சிந்திக்காத தால் ஏற்படும் குற்றம். இதையும் பகுத்து அறிந்து, யோசித்து ஆவனசெய்யவேண்டும். அது, ஆட் சியாளர் நல்கும் உதவி, ஏற்பாடு ஆகியவைகளைத்தான் பொறுத்திருக் கிறது என்றும் அவர் கூறியுள்ளார். அது உண்மையுங்கூட! அதேவேளை யில், அதற்கான பிரச்சாரம், மக்கள் மனதிலே பாயவேண்டும்; அதன் அவசியத்தை மக்கள் உணருமாறு செய்யவேண்டும்!

*  *  *

பாமரமக்கள்—பசுக்கள். பரம் பரையாகச் செய்துவந்த வழக்கம், என்பதுதான் அவர்கள், தங்கள் செயல்கள்பற்றி, நமக்கு அளிக்கும் விளக்கம். ஆனால், படித்தவர்கள், உலகை உணர்ந்தவர்கள், விஞ்ஞா னம் என்றால் என்ன, வேதகாலம் என்பது எது, என்பது பற்றிய விளக்கங்கள் உரைப்பதில் வல்லுநர் களாகி இருப்போரிடை உலவும் மூடநம்பிக்கை—வளரும் பகுத்தறி வுக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை யாகும்.

படித்தவர்கள், உலக விஷயத்தை உய்த்துணர்ந்தவர்கள் ஆகியோர்க ளிடையும் பழைமையும் மூடநம்பிக் கையும் தாண்டவமாடுகிறது!

ஜோசியம், மந்திரத்தால் எதையும் சாதிக்கலாம், அதிர்ஷ்டம்அடிக்கும். இதுபோன்ற எண்ணங்கள் அவர்க ளிடையும் உலவுகின்றன.

பகுத்தறிவு வளரவேண்டும்— அது மக்கள் வாழ்வுக்கு இன்பம் அளிக்கும், அறிவுச் செல்வங்களாக மக்களை ஆக்கும். ஆனால், அன்றா டம் உலக விஷயங்களைத் திரட்டித் தரும் தினத்தாள்களிலிருந்து, வார இதழ், கிழமை இதழ்வரை, எல்லாம் என்ன செய்கின்றன!

பத்திரிகையைப் பிரித்தால், இங்கே இன்று காலட்சேபம், அங்கே புராணக் கதை படிக்கப்படுகிறது, அதிசயமான சம்பவம், அம்மனைக் கும்பிட்ட ஊமை பேசுகிறான், இது போன்ற சங்கதிகள்தான்—பெரும் பான அளவுக்கு இடம் பெறுவதைக் காண்கிறோம்.

"பல பத்திரிகைகள் ஏராளமான இடத்தை ஜோசியத்தால் நிரப்பி, லாபம் அடைந்து வருகின்றன" என் கிறார் பராஞ்சிபே. சென்னைப் பத் திரிகைகளின் திருத்தொண்டு ஒவ் வொரு வாரமும் இதுவாகத்தான் இருக்கிறது! ஜோசியத்துக்கென்றே, பத்திரிகை வாங்கிப் படிப்பவர்களும் இருக்கிறார்கள்! இன்னும் அவை களில் வரும் விளம்பரங்களைப் பார்த் தாலோ, 'மும்மூர்த்திகவசம்', 'பரீட் சையில் தேறவேண்டுமா, காதலில் வெற்றி வேண்டுமா' இதை வாங்கி அணிந்து கொள்ளுங்கள் — இது போன்ற விளம்பரங்கள்,—

மக்களிடை அறிவு மணத்தை நிரப்ப வேண்டிய பத்திரிகைகளு டையதொண்டு இப்படி இருக்கிறது!

உண்மையில், பகுத்தறிவுப்பணி —ஓரளவு வெற்றி பெற்று வருகிற தென்றாலும், இன்னும் அது வெற்றி பெற, தாண்டிச் செல்லவேண்டிய மேடு பள்ளங்கள் பல உண்டு!

சகுனம் பார்த்தல், சாஸ்திரம் பார்த்தல், ஜோதிடம் கேட்டல், கிரிக்கெட் விழா அர்ச்சனையால் தான் ஜெயித்தது, என்று கூறல், சீட்டாட்டம் இந்த இடத்தில் உட் கார்ந்தால்தான் அதிர்ஷ்டம் வரும் என்ற பேச்சு இவை யாவும் மூட நம்பிக்கையின் – பாம்புக் குட்டிகள்!

யாவும் மறைந்து, மக்கள் மனத் திலே நிறைந்து கிடக்கும் பழைமை யையும் மூடநம்பிக்கையையும் முறி யடிக்க வேண்டிய பணி – தொண்டு எவ்வளவோ ஆற்றப்பட வேண்டும்.

மக்கள் மனதிலே பகுத்தறிவு இடம் பெற்றுவிட்டால் பழைமை என்கிற இருள் விலகும் – மூடநம் பிக்கை இருள் என்றும் நீடித்துக் கொண்டே இருக்கமுடியாது.

பகுத்தறிவு ஒரு பகலவன்! அது எழும்பினால் பழைமை ஒழிந்து, புது வாழ்வு மலரும்.

# திகைத்தார்! திணறினார்!!

ஒரு கேள்வி எழும்பியது மந்திரியாரை நோக்கி!—மந்திரியார் திகைத்தார், திணறினார்! என்ன பதில் சொல்லுவதென்று தெரியாமல் அல்ல, கேள்வியே இன்னதென்று புரியாததால்! சட்டசபைத் தலைவரை நோக்கினார், சபாநாயகரிடத்திலும் சஞ்சலமும்வேதனையும் தாண்டவமாடியது—அவருக்கும் கேள்வி புரியவில்லை—திகைத்தார், விழித்தார்!

வேடிக்கையல்ல, கடந்த வாரம் இந்திய சட்டசபையிலே நடைபெற்றிருக்கிறது, இதுபோன்ற, ரசமான நிகழ்ச்சி!

உணவு மந்திரி ஜயராம்தாஸ் தௌலத்ராம்தான் கேள்வி புரியாமல் திகைத்துத் திண்டாடியவர்! சபாநாயகர் வராத காரணத்தால் தலைமை தாங்கிய அனந்த சயனம் அய்யங்கார் — உதவிசபாநாயகர் — தான் உறுப்பினர், என்ன கேட்கிறார் என்று தெரியாமல் விழித்தவர்! கேள்வி கேட்டவரும் சாமான்யரல்ல —இந்தி சாகித்திய சம்மேளனத் தலைவர்—சேத் கோவிந்ததாஸ்! ஆங்கிலத்தை அண்ணுந்து பார்ப்பதும் தேசிய பக்திக்கு, குறைவு என்று நினைத்ததால்தானே என்னவோ, அவர் தான் கேட்டகேள்வியை இந்தியிலேயே கேட்டாராம்—அதுவும் கரடுமுரடான இந்தியில்! என்னவே, மந்திரியாரும், உதவி சபாநாயகரும் விழித்திருக்கிறார்கள்! திகைத்திருக்கிறார்கள்!!

X X X

விசாகப்பட்டினத்திலே ஒரு விழா வரவேற்பு, இந்தியாவின் கவர்னர் ஜெனரல் வந்திருக்கிறார் என்பதால். மகிழ்ச்சியுடன் விசாகை நகரசபை அவருக்கு இந்த வரவேற்பை அளித்திருக்கிறது. நகரமக்களின்குதூகலம் பூரிப்பு இவைகளைவிட, அந்த வரவேற்பைக் கண்டதும், கவர்னர் ஜனரலுக்கு மகிழ்ச்சி மலர்ந்திருக்கிறது! அந்தமகிழ்ச்சியில் பேசுகையில் கூறியுள்ளார், "முன்யோசனையுடன் நீங்கள் எனக்கு ஆங்கிலத்தில் வரவேற்புப் படித்து வழங்கியுள்ளீர்கள். எனவே நானும் ஆங்கிலத்திலேயே பேசுகிறேன்" என்று! முன்யோசனையுடன், விசாகை மக்கள் நடந்துகொண்டனர் —நாம் கூறவில்லை—கவர்னர் ஜனரல் கூறுகிறார்! தெலுங்கு மொழி தெரியாது, தெரிந்த கொஞ்சநஞ்சமும் தெற்கேயிருந்து போய் நீண்ட காலமாகிவிட்டதால் மறந்து போய்விட்டதாம்! ஆகவே, மகிழ்கிறேன், நல்லவேளையாகத் தெலுங்கில் வரவேற்பு கொடுத்து என்னை திகைத்துத் திண்டாடச் செய்யாமல், ஆங்கிலத்திலேயே, புரியும்படியாக, எனக்கு நீங்கள் கொடுத்திருக்கும் வரவேற்பு இருப்பதால் என்று!

X X X

இந்தியிலே கேட்கப்பட்ட கேள்வியைப் புரிந்து கொள்ள முடியாமல், இந்திய சர்க்காரின் மந்திரியும், இந்தியச் சட்ட சபையின் உதவிச் சபாநாயகரும் திண்டாடியிருக்கிறார்கள்! திணறிப் போயிருக்கிறார்கள்!!

கடைசியில் ஆங்கிலத்தில் கேள்வி கேட்கப்பட்ட பின்னர்தான், உணவு மந்திரியாருக்கும், உதவி சபாநாயகருக்கும், விஷயம் விளங்கியதாம். இந்தியில் கேட்கப் பட்டது, அவர்களுக்குப் புரியவில்லை — காரணம், அவர்களுக்கு இந்தி தெரியாது!

கவர்னர் ஜெனராலுக்கு வரவேற்பு அளித்துள்ளார்கள். வரவேற்பிதழ், தெலுங்கு மொழியில் இல்லாமல், தான் புரிந்துகொள்ளும் வகையில் ஆங்கிலத்தில் இருப்பதற்கு மகிழ்ந்துள்ளார், அதோடு அப்படிச் செய்தது தன் மீது ஆந்திர நண்பர்கள் காட்டும் அன்பு ஆர்வம் என்றும் விளக்கமுரைக்கிறார். ஆங்கிலத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு, அவருக்கு, அவ்வளவு மகிழ்வையூட்டியிருக்கிறது! காரணம் — தெலுங்கு அவருக்குப் புரியாது, படிக்க தெரியாது!!

X X X

"இந்தி கற்றுக் கொள்ளுதல் எ பது பற்றி ஆங்கிலத்தில் பேசுவா இப்படி ஒரு விளம்பரத்தைக் க டால், காண்பவர்களுக்கு வேடிக்கை யாக யிருக்கும், சிரிப்பும் நகை சுவையும் கலந்துவரும்! தமி மொழி வளர்ச்சி குறித்து இந்தி பேசுவார்—என்று தமிழையே அ யாத ஒரு வடநாட்டுக்காரர் பேச போகிறார் என்றால், எல்லோரு சிரிக்கத்தான் செய்வார்கள். ஆனு உண்மையில், ஒரு செய்தி அனைத்திந்திய வானொலி நிலைய வெளியிட்டிருக்கிறது. அதை காணும்பொழுது, நமக்கு சிரிப் மட்டுமல்ல, வேதனையும் வருகிற

இம்மாதம் 19ந் தேதியிலிருந் சென்னை, திருச்சி, விஜயவாடா நி யங்களிலிருந்து இந்தி பாடங் ஒலிபரப்பப்படப் போகிறதா

தமிழ் மூலம், திருச்சி சென் ஆகிய நிலையங்கள் ஒலி பரப்புமா 20 நிமிடங்கள் இதற்கெனச் செ வழிக்கப்படுமாம் — மூன்று மா காலத்தில் முதல் பாட வரி முடிக்கப்படத் திட்டமிடப்பட் ளதாம். இந்தத் திட்டத்தை 19 தேதியன்று சென்னை கல்வியமை சர் மாதவமேனன் ஆரம்பித் வைக்குமுகத்தான் "ஹிந்தி கற் கொள்ளுதல் என்பதுபற்றி ஆ லத்தில் பேசுவார்" என்று அறி துள்ளது வானொலி நிலையம்! ஹி கற்றுக்கொள்ளுவது பற்றி ஆ லத்தில் பேசுவார்!

* * *

சட்டசபையிலே, இந்தி கேள்வி கேட்கப்பட்டதால் உ சபாநாயகரும், மந்திரியாரும் தி

(5-ம் பக்கம் பார்க்க)

# ※ படிப்பகம் ※

## கற்கண்டு

...சிரியர் :— கவிஞர் பாரதிதாசன்.

...கற்கண்டு, பொறுமை கடலினும் ...ரிது ஆகிய இரு நகைச்சுவைச் ...த்திரங்கள் அடங்கிய நூல்.

...குமரியை, கிழவன் மனைவியாக்கிக் ...ள்ளத் திட்டம் போடுகிறான். ...மரியின் தந்தை ஏழ்மையால் ...தற்கு இசைகிறான். இடையிலே ...ரவேசித்த சிறுத்தொண்டன் ...தை பாடும் தருமன், குமரியைத் ...டிக்கொண்டு போகிறான். தரு...ன்—கற்கண்டு வாழ்வு மலர்கிறது!

—இது "கற்கண்டு"

...பிறர் பிறந்தது தனக்கு உழைக்கத்தான், என்று எண்ணும் ஒரு ...ரிய பண்ணைக்காரர், ஏழையின் ...க்குரல்கள், தன்னை எட்டும் ...ாதெல்லாம் 'பொறுமை'யுபதேசம் ...கிறார். திடமான அவரது மகன், ...ட்டை வெறுத்து வெளியேறி...டுகிறான். அப்போது அவரது ...பொறுமை' உபதேசத்தின் பலன் ...ன்மேல் கிட்டுகிறது.

...புரட்சிக் கவிஞரின் சிந்தனைச் ...ாலையிலே பூத்த, சிறந்த மலர்கள் ...வை. [illegible] ...ண்டல், ஆகியவைகளுடன் சமு...ய வேதனை சித்தரிக்கப்பட்டுள்...து.

...பெறும் இடம்:— பாரதிதாசன் பதிப்பகம், 95, பெருமாள் கோயில் தெரு, புதுச்சேரி.

விலை ரூ 1—0—0

* * *

## சதிகாரச் சாமியார்

...சிரியர் :— செங்குட்டுவன்

...சாதிச் சனியன், சமுதாயக் ...கொடுமை, வைதிகக் கேடு ஆகியவை...ளைச் சித்தரிக்கும் சிறு கதை நூல்.

...சாமியார் ஒருவனின் சதிச்செயல்...ால் ஒரு பேதைப் பெண்ணின் வாழ்வு தூக்கு மேடைக்குக் கொண்டு செல்லும் நிலைமை ஏற்படுகிறது. முடிவில் சதி வெளிப்படுகிறது. உணர்ச்சி வேகத்துடன், இந்நூலை எழுதியுள்ளார் தோழர் செங்குட்டுவன்.

பெறும் இடம்:— செங்குட்டுவன்,
22, சுண்ணாம்புக்காரத் தெரு,
சின்ன காஞ்சிபுரம்.

விலை அணா 12

# செந்தமிழ்ப் பதிப்பக வெளியீடுகள்

## மதம் அவசியமா?

இக்கேள்விக்குப் பலதரப்பட்டவர்கள் வழங்கியுள்ள முடிவுகளின் கூட்டுத் தொகுப்பு நூல் இது. பெரியார் ஈ. வே. ரா, சி. என். இராமச்சந்திரனார், அறிஞர் அப்பாதுரை, இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், நாரண. துரைக்கண்ணன், ம. ப. பெரியசாமித்தூரன், டி. கே. சீனுவாசன், சுப. நாராயணன், கே. ஜி. இராதாமணாளன், நாரா. நாச்சியப்பன் ஆகியோரது கருத்தோவியங்கள் உள்ளன. இந்நூல் ஒரு சிந்தனைக் குகை.

விலை அணா 12.

* * *

## கடவுள் படும்பாடு

ஆசிரியர் :— இமயவரம்பன்.

புராணப் புலவர்கள், கடவுளுக்கு காவியம் அமைத்த 'கம்பர்கள்' 'சேக்கிழார்கள்' ஆகியோர் கையில் இந்து மதக் கடவுளர்கள் பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல; வேடிக்கையும் வேதனையும் நிறைந்ததாகும்.

இந்த நூலில் கடவுள்களின்மீது 'நிந்தாஸ்துதி'யாக வைத்துப்பாடப்பட்ட பாடல்களைத் தெரிந்தெடுத்து, சுவை ததும்பப் பத்து கட்டுரைகள் தரப்பட்டிருக்கின்றன. படிப்போருக்கு ஒரு விருந்து!

விலை அணா 8

X X X

## கடைசி முத்தம்

ஆசிரியர் :— இளமைப் பித்தன்.

சிந்தை களிக்கச் செய்யும் சிறு கதைகள் எட்டு அடங்கியுள்ளன. 'வாத்தியாரம்மா' நிலவில் நர்த்தனம் புரிகிறாள். 'பேசும் பிணங்கள்' நினைவுப்பாதையில்'நம்மைத் திருப்பி 'நீதி' உண்டா என்று கேட்கின்றன; எளிய நடையில்!

விலை அணா 8.

* * *

## கண்ணீர்க் கோட்டை

ஆசிரியர்:— தில்லை வில்லாளன்.

பெண்கள் ராஜ்யம் அமைந்து, ஆண்களுக்கு இன்று பெண்களுக்கு வழங்கப்படும் 'நீதி'கள் அளிக்கப்பட்டால் எப்படியிருக்கும்? என்ற கற்பனையின் கோட்டை—கண்ணீர்க் கோட்டை. பழைமையைச் சாடும் புதுமுறை! படிப்போர்க்குக் களிப்பூட்டும்.

விலை அணா 6.

* * *

## கிளிக்கூண்டு

ஆசிரியர் :— தில்லை வில்லாளன்

கா...த...ல்—இம்மூன்று எழுத்துக்கள் வாழ்க்கையின் மோகனச் சோலை என்று கருதப்படுகிறது; கூறப்படுகிறது. தோழர் வில்லாளன் போர்க்களம், கொடிப்பாதை, பாலைவனம்—மலர் வனம், கானல் நீர்—காட்டாறு—ஜீவநதி, என்று காதலின் நிலைகளுக்குப் பெயர் சூட்டி, இழந்த காதல், அழிந்த காதல், எழும் காதல் ஆகியவைகளைப்பற்றி வெளுத்து வாங்கியிருக்கிறார், இந்நூலில். சிந்தனையோட்டமும்,மாணவர் சூழ்நிலைச் சித்தரிப்பும்,எழுத்து வேகமும் பாராட்டற்குரியன.

பெறும் இடம்:— செந்தமிழ்ப் பதிப்பகம், கீழ ராசவீதி, புதுக்கோட்டை. விலை அணா 10.

14-1-50 பொங்கலன்று திரையிடப்படும்!



வேகமுடன் வளர்கிறது!

மாடர்ன் தியேட்டர்ஸின்

# பொன்முடி

இனிய தமிழ் நாட்டின் இயல்புடன் கூடிய

களங்கமற்ற காதல் சித்திரம்

கதை பாரதிதாசன் | டைரக்ஷன் எல்லிஸ் R. டங்கன்

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street, Kancheepuram.